738

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

738
2-54



-2-

கேட்டீர்களா!

இந்திய பாஷையில் முதல் பத்திரிகை

முதல் முதல் இந்திய பாஷை அடங்கிய பத்திரிகை 'மெட்ராஸ் கெஜட்' என்பதுதான் 1795-ஆம் வருஷம் ஜனவரி மாதத்தில் இது தொடங்கியது. முதல் முதலில் தமிழில் சர்க்கார் அறிக்கைகளையும் இதில் வெளியிட்டார்கள்.

இந்தியாவின் விஸ்தீரணமும் ஜனத்தொகையும்

1951-ஆம் வருஷத்தில் 'சென்ஸஸ்' நடந்ததே, தெரியுமா? அப்பொழுது எடுத்த கணக்கு இது: இந்தியாவின் மொத்த விஸ்தீரணம் 11,76,864 சதுர மைல். மொத்த ஜனத் தொகை 35,68,79,304.

மகத்தான சாதனை

எட்டாத எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்துவிட்டான் மனிதன். எத்தனையோ பேர் எத்தனையோ காலமாய் முயன்றும் முடியாத அந்த அற்புதத்தை டேன்ஸிங் என்ற இந்தியர் சாதித்துக் காட்டிவிட்டார். இப்பொழுது மற்றோர் இந்தியர் முப்பத்தைந்து மைல் நீளமுள்ள கடலை நீந்தியே கடந்துவிட்டார். இதுவரையில் கடலிலே இவ்வளவு நீண்ட தூரத்தை யாரும் நீந்தியே கடந்ததில்லை. சில ஆங்கிலேயர்கள் 22 மைல் தூரமுள்ள இங்கிலீஷ் கால்வாயைக் கடந்திருக்கின்றனர். பிரான்ஸிலுள்ள கலேயுக்கும் இங்கிலாந்திலுள்ள டோவருக்கும் இடையிலுள்ளதே இங்கிலீஷ் கால்வாய். இதையே ஐரோப்பியர் பெரிய சாதனையாக எண்ணி வந்தார்கள். ஆனால் முருகுப்பிள்ளை நவரத்தினசாமி என்பவர் இலங்கையிலுள்ள வல்வெட்டித்துறையிலிருந்து தென்னிந்தியாவிலுள்ள கோடிக்கரைக்கு நீந்தி வந்துவிட்டதைக் கண்டு உலகமே அதிசயிக்கிறது. சுமார் 27 மணி நேரத்தில் முப்பத்தைந்து மைல் தூரம் நீந்தியிருக்கிறார் என்றால் சாமானியமா? சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் அரசி எலிஜபெத் அவரைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்.

ஏழாவது தமிழ் விழா

தமிழ் வளர்ச்சிக்கழகத்தார் ஆண்டுதோறும் ஒவ்வோர் இடத்தில் தமிழ் விழா நடத்துகிறார்கள். இந்தக் கழகத்தின் சிபாரிசுக்கிணங்க அந்தந்த ஆண்டில் வெளியான சிறந்த தமிழ் நூல்களுக்கு, சென்னை அரசாங்கத்தார் பரிசு கொடுத்து வருகிறார்கள். மதுரை, திருவாரூர், கோயம்புத்தூர், யாழ்ப்பாணம், சென்னை, புது டில்லி ஆகிய இடங்களில் இந்த விழா நடைபெற்றிருக்கிறது. இந்த வருஷம் அண்ணாமலை நகரில் விழாவை நடத்தும்படி அண்ணாமலை சர்வகலாசாலையார் அழைத்திருக்கிறார்கள். ஜூன் மாதம் இந்த விழா நடைபெறும்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 10

15 - 5 - '54

குழந்தைகளே !	பக்கம் 2
சந்திரகிரிக்கோட்டை	.. 3
தப்பி சேவ்!	.. 9
தோழிக்கு..	.. 13
நல்ல தீர்ப்பு	.. 18
அசடு வழிந்தது	.. 20
மறைந்த மோதிரம்	.. 21
கண்ணன் கழக அங்கத்தினர்கள்	27
பிள்ளையார் பிடி	.. 29
கேளுங்கள், சொல்லுகிறேன்	.. 32
தூங்கும் அழகி	.. 35
எங்கள் பகுதி	.. 37
கேட்டீர்களா! - இரண்டாவது அட்டை	
கண்ணன் கிளைக் கழகம் - மூன்றாவது அட்டை	

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

★

ஆர்வி

எழுதும்

அடுத்த தொடர்கதை

லீடர் மணி

கண்ணனில்

விரைவில் ஆரம்பமாகிறது

எதிர்பாருங்கள்!

★

குழந்தைகளே!

இந்த இதழின் கடைசி அட்டையில் ஒரு புதிய பரிசுப்போட்டி வெளியாகியிருக்கிறது. விரைவில் வேறொரு பரிசுத் திட்டம் வெளிவர இருப்பதால் இந்தப் போட்டியை முன் போட்டிகளைப் போலவே அமைத்திருக்கிறோம்.

போட்டி என்றதுமே நீங்கள் மலைத்துப்போய் விடமாட்டீர்கள் என்று நம்புகிறேன். இந்தக் காலத்தில் இந்த வார்த்தை எங்கே பார்த்தாலும் அடிபடுவதைப் பார்த்தால் பயமாகவே இருக்கிறது. இது அப்படியெல்லாம் குருட்டு அதிருஷ்டப் போட்டியில்லை. இதில் உங்கள் திறமையையும், உங்கள் அறிவையும் சிறந்த முறையில் பயன்படுத்தலாம். இந்தப் போட்டியினால் உங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் பெருகுமே தவிர, குறுக்கு வழியில் குதர்க்கமாகப் புத்தி செல்லாது. போட்டியின் விதிகளையும் கொடுத்திருக்கிற விவரங்களையும் நன்றாக மனசில் வாங்கிக் கொள்ளுங்கள். அதன் பிறகு நன்றாகச் சிந்தனை செய்யுங்கள். உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டிவிடுங்கள். அந்தக் கற்பனைக் குதிரை உங்களை ஒரு கதை மண்டலத்தில் கொண்டுபோய்ச் சுகமாகச் சேர்த்துவிடும். சம்பவங்கள் கண்முன்னே உருப்பெறும். அப்படிக் கதை நன்றாக மனசில் உருவான பிறகு அதை எப்படிப் பிறருக்குச் சொல்லலாம் என்பதை யோசித்துப் பாருங்கள். யோசனை திருப்திகரமாகிவிட்டால் அப்புறம் வேலை சுலபமானதுதான். பேனாவும் காகிதமும் தான் வேண்டியவை. சுத்தமாக, தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதுங்கள். கதை நன்றாக அமைவதில் கருத்தாக இருங்கள். கருத்தாக இருந்தால்தான் வீண் சொற்களும் சொற்றொடர்களும் வராமல் இருக்கும். இல்லையோ உங்கள் கதை ஒரு பக்கம் இழுக்க, அந்தச் சொற்கள் ஒரு பக்கம் இழுக்க, கதை 'கோவிந்தா'வாகிவிடும்!

இந்த மாதிரிப் போட்டிகளில் ஒரு சிலருக்குத்தான் பரிசு பெறும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். எல்லாருக்கும் பரிசு கிடைக்காதுதான். இருந்தால் என்ன? பரிசுப் போட்டியில் கலந்துகொள்ளுகிற சாக்கில் ஒன்றைச் சிந்திக்கவும், சிந்தித்தவற்றை எழுத்தில் எழுதவும் ஒரு நல்ல பழக்கம் ஏற்படுகிறதல்லவா? அத்துடன்கூட 'முயற்சி திருவினையாக்கும்' என்பது உங்களுக்கா தெரியாது? இந்தப் போட்டியில் இல்லாவிட்டால் அடுத்ததில் பரிசைத் தட்டிக்கொண்டு போகலாமே! ஆகையால் கண்ணன் கழகத்தில் உள்ள 15,000 குழந்தைகளில் எழுத முடியாத குழந்தைகள் ஐயாயிரம் பேர் போனாலும் பத்தாயிரம் குழந்தைகளாவது இந்தப் போட்டியில் கலந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணனில் வேறு சில அபிவிருத்திகள் செய்ய எண்ணியிருக்கிறோம். இதை முன்பே சொல்லியிருக்கிறேன். சொல்லியபடி செய்து கொண்டும் வந்திருக்கிறேன். மேலும் சிலவற்றைச் செய்து உங்கள் அன்புப் பரிசை அப்படியே தட்டிக்கொண்டு போக நான் முயன்று வருகிறேன். நிச்சயம் எனக்கு அந்தப் பரிசு கிடைக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

—ஆசிரியர்.

குதிரைகள் இரண்டும் கரையிலிருந்த பாறைகள் மீது ஏறியும் பள்ளங்களில் இறங்கியும் போய்க்கொண்டேயிருந்தன. அமலனின் குதிரையை முன்னேற விடாமல் நீலவேணி கரைமேலிருந்த ஒற்றையடிப் பாதையை அடைத்துக் கொண்டே ஓடியது. அதை மிஞ்சித் தாண்டுவதற்கு ஏற்ற இடமே அமலனுக்குக் கிடைக்கவில்லை. முகத்தில் ரத்தம் தெறித்துக் கொண்டிருந்தது. மிகுந்த ஆவேசத்துடன் விமலனை மிஞ்ச அவன் நல்ல சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டே இருந்தான்.

ஏரிக்கு நாலாபுறங்களிலும் கலுங்கும் கணவாய்களும் இருந்தன. மழைத் தண்ணீர் ஓடிவந்து ஏரியை நிரப்பவும் ஏரித் தண்ணீர் பக்கத்துப் பிரதேசங்களுக்கு வாய்க்கால்கள் மூலம் பாயவும் வசதியாக அவற்றை அமைத்திருந்தார்கள், அந்தக் காலத்து நீர்ப்பாசன அதிகாரிகள். இரண்டு பாறைகளுக்கு இடையே குதிரைகள் இரண்டும் வரும்போது ஓரிடத்தில் கருங்கல்லாலான கண்மாய்கள் நீட்டிக்கொண்டிருந்தன. வழிந்தோடும் ஏரி நீர்த் தண்ணீர் சலசலவென்று கீழே அரித்தோடிக்கொண்டிருந்தது.

குதிரைகள் கீழே இறங்கிச் செல்ல முடியாது. அடுத்தபடி மேலே போக வேண்டுமானால் அந்தக் கற்களின்மேல் வெகு ஜாக்கிரதையாகக் கால்களை வைத்துத்தான் செல்லவேண்டும். அந்த இடம் வந்ததும் ஒரு கணம் இரண்டு குதிரைகளுமே மலைத்தன. முதலில் வந்த விமலன் நீலவேணியை முடுக்கவே அது கால்களை வைத்து முன்னால் சென்றது. பஞ்ச கல்யாணிக்கும் அவசரம். அமலன் முடுக்கிய முடுக்கில் அது நீலவேணியின் கால்களைப் பல தடவை இடறியது.

அப்போதெல்லாம் விமலன் கடுங் கோபத்துடன் உறுமினான். "டேய், பேடிபோல நடந்து கொள்ளாதே!" என்று அண்டமே அதிருவதுபோல் கர்ஜித்தான்.

அந்த இடத்தில் இரு புறமும் நடுநிலைமையாளர்கள் நின்றார்கள். அவர்களைப் பார்த்து, "ஐயா, பாருங்கள்! கவனமாகப் பார்த்துக்கொண்டேயிருங்கள்!" என்று இரைந்து கூவினான்.

அமலனும் தான் நிரபராதி என்பதைக் குறிப்பிட்டுப் பதிலுக்குக் கத்த வேண்டியிருந்தது. "அடே, ஒரே விநாடியில் உன்னைத் தொலைத்து விடுவேன்! யாரைப் பார்த்துப் பேடி என்கிறாய்!" என்றான்.

அந்த இடத்திலும் விமலனின் குதிரைதான் வென்றது. அமலனின் குதிரை குறிப்பிடத்தக்க தூரம் பின்வாங்கிவிட்டது. ஆயினும் அவன் நம்பிக்கை தளரவில்லை. "உம்..உம்.." என்று சேணத்தைக் குத்திப் பிடரி மயிரைப் பிடித்து உந்தினான்.

அடுத்தபடியாகச் சிறிது தூரத்தில் மற்றோர் ஓடை வந்து குறுக்கிட்டது. அங்கே ஒருவர் மிகுந்த எச்சரிகையாக நின்றுகொண்டிருந்தார். விமலன் மிகவும் அலட்சியமாக, "நீலா! உம்.... தாண்டு! மலைக்காதே!" என்று குதிரையை முடுக்கினான். முன்பு மலைக்குகையில் நுழையுமுன் இருந்த ஓடையில் தாண்டியிருக்கிறானே! இப்பொழுது சும்மா இருந்துவிடுவானா? அந்த அநுபவத்தை வைத்துக்கொண்டு நீலவேணி ஒரே பாய்ச்சலாக ஓடி வந்து குபீர் என்று அந்தப் பக்கம் பாய்ந்துவிட்டது. ஆனால் பஞ்ச கல்யாணி நிதானம் தவறிவிட்டது. எவ்வளவு தூரத்திலிருந்து வேகமாக வந்து பாயவேண்டும் என்ற அநுபவம் அதற்கு இல்லை. அமலன் முடுக்கினான். பஞ்ச கல்யாணி பாய்ந்தது. ஆனால் -

அடுத்த கணம் பாதி ஆறு தாண்டிய கதையாகிவிட்டது. சுழலிட்டுக் கொண்டு செல்லும் ஓடையில் அது விழுந்துவிட்டது. அமலனும் அதனோடு சுருண்டு விழுந்து விட்டான். நல்ல காலம்; அடிபட்டு ரத்தக் காயம் ஏற்படாமல் இருந்ததே பெரிய காரியமாகப் போயிற்று!

முன்னால் சென்ற விமலன் திரும்பிப் பார்த்தான். ஏதாவது விபரீதமாக ஏற்பட்டு விடப் போகிறதே என்று ஒரு கணம் தயங்கினான். ஆனால் படுகளத்தில் ஒப்பாரியா? யுத்தத்தில் பச்சாத்தாபமா?

இதற்குள் ஓடைக்கு இருபுறமும் இருந்த இரண்டு நடுநிலைமையாளர்களும் அமலனுக்கு உதவ முன் வந்தார்கள். அமலனுடைய ஆடைகள் தெப்பமாக நனைந்து போயின. விழுந்த சோடே தெரியாமல் அவன் மிகவும் பரபரப்பாகப் பஞ்ச கல்யாணியின் மீது ஏறினான். விமலனுடைய குதிரை நூறு கஜ தூரம் முன்னால் போவதையும் விமலன் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே செல்வதையும் பார்த்தான்.

"நீங்கள் மீண்டும் தாண்டிச் செல்லலாம்!" என்று ஒரே குரலில் நடுநிலைமையாளர்கள் சொன்னார்கள்.

அமலன் சிறிதும் தயங்கவில்லை. பஞ்ச கல்யாணியை உற்சாகப் படுத்த எண்ணி முதுகில் தட்டிக் கொடுத்தான். அவனுடைய குறிப்பை உணர்ந்து கொண்டது போல் குதிரை பின்னால் போயிற்று. போன வேகத்திலேயே வெகு லாகவமாகத் திரும்பியது. அதன் வேகமும் துடிப்பும் அமலனையே கதிகலங்க வைத்தன. ஒரே மூச்சில் பஞ்ச கல்யாணி குபீரென்று ஓடையைத் தாண்டியது. ஆகா, என்ன ரோசம்! என்ன மிடுக்கு!

கரையோரமாகத் தோணியில் வந்த பாளையக்காரர் முதலானோர் இந்தக் காட்சியைக் கண்டு கரகோஷம் செய்தார்கள். அமலனுக்கே மனசு மிகவும் பூரித்துப் போயிற்று. தன் ரோசத்தைவிட பஞ்ச கல்யாணியின் ரோசம் பன்மடங்கு அதிகமாக இருப்பதை அதன் ஓட்டத்தி லிருந்தே தெரிந்து கொண்டான். ஓட்டமா ஓடியது அது! விண்ணென்று காற்றோடு காற்றாகப் பறந்தது என்றுதான் சொல்ல வேண்டும். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் விமலனுக்கும் அமலனுக்குமிடையே இருந்த தூரம் மிகவும் குறுகிப் போயிற்று. விமலன் கூட இந்த நிலையை எதிர்பார்க்கவில்லை. இந்த வேகத்தில் போனால் நிலைமை மிஞ்சி விடும் போலாகிவிடவே அவனும் குதிரையை முடுக்கத் தொடங்கினான்.

ஏரியின் வடமேல் புறத்தில் குதிரைகள் இரண்டும் இருபது கோல் தூரம் முன்னும் பின்னுமாக ஓடிக்கொண் டிருந்தன. "ஹா! ஹா!" என்று இளவல்கள் இருவரும் குதிரைகளை விரட்டும் சப்தம் ஏரியில் எதிரொலித்துக்கொண்டு சென்றது. கரை அந்த இடத்தில் சற்று விசாலமாயும் சமதரையாகவும் இருந்தது. அங்கே ஓர் ஆள் உட்கார்ந்திருந்தார். குதிரைகள் நெருங்கி வரும் சமயம் பார்த்து அவர் அண்டமே அதிருவதுபோல, "ஹ ஹ் ஹ ஹ் ஹா!" என்று சிரிக்கத் தொடங்கினார். சிரிப்பின் எதிரொலி ஏரியில் பரந்து சென்று, எதிரே சிறிது தூரத்தில் இருந்த குன்றின்மீது மோதி, பயங்கரமாக ஒலித்துச் சிதறியது.

குதிரைகள் நெருங்க நெருங்க அந்த ஆளுடைய சிரிப்பும் வலுத்து வந்தது. முன்னால் வந்த விமலன், 'யாரோ பைத்தியக்காரன்!' என்று வெகு அலட்சியமாக நீலவேணியைத் தட்டி விட்டான். ஆனால் அமலன் மட்டும், 'இதில் ஏதோ விசேஷம் இருக்க வேண்

டும்!'' என்று எண்ணி வெகு ஜாக்கிரதையாக முன்னேறிக் கொண்டிருந்தான்.

அப்போது, ''ஆ அப்பா!'' என்ற கூக்குரல் முன்னுல் கேட்டது. அமலன் கவனித்தான். சமதரை போலிருந்த ஏரிகரையில் ஒரு பெரிய பள்ளம் வெட்டப்பட் டிருந்தது. ஆனல் அந்தப் பள்ளம் இருப்பது தெரியாதபடி மேலே மெல்லிய வலைகளை வைத்து, மணலையும் தூவி வைக்கப்பட் டிருந்தது. பார்த்தால் யானை பிடிக்க வெட்டும் குழி போலிருந்தது. அது தெரியாமல் முன்னுல் சென்ற நீலவேணி முன்னங்கால்களை வைத்ததால் ஒரு குட்டிக் கரணமே போட்டு விட்டது. விமலன் முதலில் விழ, அவன் மேல் நீலவேணி விழ - அந்தக் காட்சியைக் கண் கொண்டு பார்க்க முடியவில்லை. பஞ்சகல்யாணிக்கு இது அநுகூலமாகப் போயிற்று. பள்ளத்தைச் சுற்றிக் கொண்டு மேலே செல்லத் தொடங்கியது.

'நல்ல காலம், நாம் பிழைத்தோம்! பள்ளம் இருப்பது தெரியாமல் விழுவோம் என்றுதான் அந்த மனிதர் முன் கூட்டியே சிரித்தார் போலிருக்கிறது!' என்று எண்ணிய அமலன் சட் சென்று எதையோ பார்த்து விட்டுப் பஞ்ச கல்யாணியை நிறுத்தினுன். ஒரு கணம் தப்பியிருந்தால் முன்னே பஞ்ச கல்யாணி ஓர் அடிவைத்திருக்கும்! நீலவேணிக்குச் சற்றுமுன் நேர்ந்த கதியே அதற்கும் அமலனுக்கும் நேர்ந்திருக்கும்! ஏதோ நல்ல காலம், தரை கெட்டியாக இல்லா

மல் மணல் தூவியிருப்பதை அவன் கண்கள் பார்த்து விட்டன.

அமலன் இதை எதிர்பார்த்தே இருந்தான். அதனுல் தப்பித்துக் கொண்டான். பின்னுல் சற்று தூரத்தில் வருகிற விமலன் மறுபடியும் விழுந்தாலும் விழலாம்! எனவே அமலன் அந்தப் பள்ளம் இருப்பதை வெளிப்படுத்தாமல் இருக்க, ஏரியின் தண்ணீர் மோதும் கரை ஓரமாகவே போய் மீண்டும் கரை மேல் ஏறிச் செல்லத் தொடங்கினுன்.

சற்றுத் தூரம் சென்று திரும்பிப் பார்த்தபோது ஆவேசத்துடன் விமலன் வந்துகொண்டிருப்பது தெரிந்தது.

ஏரியின் வடபுறத்தில் கரை மீது பாதை இரண்டு பிரிவாகத் தட்டிவைத்துப் பிரிக்கப் பட்டிருந்தது. வரிசையாகத் தாமரைப் புஷ்பங்களைப் பறித்து இருபுறமும் போட்டிருந்தார்கள். அந்த இடம் வந்ததும் அமலனுக்குச் சிறிது யோசனையாக இருந்தது. புஷ்பங்களை என்ன செய்வது? யோசனை செய்வதற்குச் சிறிது தாமதமானாலும் விமலன் அவனை மிஞ்சி முன்னால் போய் விடுவான்! சட்டென்று குதிரையை விட்டுக் கீழே இறங்கினான். தன் மேலாடையில் எல்லாப் புஷ்பங்களையும் வாரி எடுத்துக் கொண்டான். புறப்பட்டு விட்டான். அவன் அடைப்பைத் தாண்டி சாதாரணமான பாதைக்கு வந்ததும் விமலனுடைய நீலவேணி வந்ததும் சரியாக இருந்தன.

இரண்டு குதிரைகளும் சமமாக வட கரையைத் தாண்டி, கீழ் கரையில் ஓடி வந்தன. வழியில் ஒரு விக்கிரகம் நிறுத்திவைக்கப் பட்டிருந்தது. இரண்டு சகோதரர் களும் அந்த விக்கிரத்தைச் சுற்றிப் போகவேண்டியிருந்ததால் அதை நன்றாகக் கவனித்தார்கள். ஒரு வலம் வரும்போது அமலனுடைய யோசனை வேறு விதமாக மாறி விட்டது. க்ஷண நேரம் தயங்கிக் குதிரையை நிறுத்தினன். ஆனல் விமலனுடைய நீலவேணியோ அந்த க்ஷண நேரத்தைப் பயன் படுத்திக் கொண்டு முன்னல் பாய்ந்தது. அடடா! என்ன வேகம், என்ன வேகம்! அமலன் எங்கே வருகிறன் என்பதே தெரியவில்லை! அதுதான் கடைசி நிலை! அந்த இடத்தில் மக்கள் யாவரும் திரண்டு நின்றார்கள். போட்டி முடிவாகும் அந்த இடத்தை நோக்கி விமலனுடைய குதிரை வாயுவேகம் மனோ வேக மாக வந்து கொண்டிருந்தது. ஜனங்களுடைய ஆரவாரத்தைக் கேட்க வேண்டுமா?

"அவன் பெரியவன்தான்!" என்றார்கள் சில பேர்.

"இல்லை, இல்லை. சின்னவன் தான்!" என்றார்கள் வேறு சிலர்.

கீழ் கரையின் எல்லையில் மூன்று பெரிய வளையங்கள் சேர்ந்தாற் போல் செங்குத்தாக நிறுத்தப் பட்டிருந்தன. அந்த வளையங் களில் எண்ணெயை நனைத்த துணி யைச் சுற்றியிருந்தார்கள். அவற் றின் அருகே நடு நிலைமையாளர் கள் நின்று கொண்டிருந்தார்கள். விமலனுடைய குதிரை அருகில் வரும் சமயம் அந்தப் பந்தங்களை அவர்கள் கொளுத்தி விட்டு விட்டார்கள். குதிரை நெருங்க நெருங்க நெருப்பு கொழுந்து விட்டு ஜ்வாலையாக எரிந்தது. அந்த வளையத்துக்குள் பாய்ந்து தாண்டி வரும் குதிரையே வெற்றி பெற்றதாக அறிவிக்கப் படும். அதனேடு மற்ற இடங்களிலும் போட்டி விதிப்படி நடந்து வந் திருக்க வேண்டும்.

விமலனுக்கு எவ்விதச் சந்தேக மும் எழவில்லை. அந்தப் பந்தங் களை ஒரே மூச்சில் தாண்டி விட் டால் வெற்றிதான்!

குதிரை சிறிதும் தயங்கவில்லை; தாமதிக்கவும் இல்லை. முன் பின்னு கச் சிறிது சென்று ஒரே தாவலா கத் தாவி வந்து, நெருப்பு வட் டத்துக்குள் பாய்ந்து வெளிப்பட் டது. ஆகா! அப்போது எழுந்த ஆரவாரமும் கோஷமும் கோடை இடியைப் போல முழக்கின.

நெருப்புப் பந்தங்களைத் தாண்டி விமலன் வெளிப்பட்டானே இல் லையோ எதிரே புலிக்குட்டி நிற்பதைப் பார்த்தான்.

எல்லாரும் உற்சாகமாகக் கூவு கிற சமயத்தில் அவன் மட்டும் வாய் மூடி மௌனியாக, இருப்பா னேன்? விமலனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'போட்டி விதிகளில் எதிலாவது தவறி விட்டோமோ!' என்று சிந்தித்தவனுகக் குதிரையை இழுத் துப் பிடித்து வெற்றி எல்லையில் நிறுத்தினன்.

அதே சமயம் பஞ்ச கல்யாணி நெருப்புப் பந்தங்களைத் தாண்டு கிற முயற்சியில் ஈடுபட்டிருந்தது. ஜனங்களோ அதைப் பார்த்துக் கேலியாக நையாண்டி செய்து கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

தம்பீ, கேள்!

க. சண்முகசுந்தரம்

எனதருமைத் தம்பி!

உனக்கு ஓர் அருமையான, வேடிக்கையான, வாழ்க்கைச் சம்பவத்தைக் கூறப் போகின்றேன். என் வாழ்க்கையில் நடைபெற்ற மறக்கமுடியாத நிகழ்ச்சி. அது மட்டுமா? உலகம் போற்றும் நமது ஒப்பற்ற தமிழ் நூலாகிய திருக்குறள் இருக்கிறதல்லவா? அந்த நூலிலுள்ள ஒரு குறட்பாவுக்கு உதாரணமாக அந்தச் சம்பவத்தைச் சொல்லலாம்.

நான் ஒரு மத்தியத் தந்தி நிலையத்தில் 'டெலிகிராபிஸ்டாக' அதாவது தந்திக் குமாஸ்தாவாக வேலை பார்த்து வருகிறேன். நீ எப்போதாவது மத்திய தந்தி நிலையம் சென்று பார்த்திருக்கிறாயா? இல்லையென்றால் சமயம் வாய்க்கும் பொழுது, உன் வாத்தியாரையோ, உன் அப்பாவையோ அழைத்துச் சென்று காண்பிக்கச் சொல். வெளியே நின்று பார்த்தால், ஒரே 'கொட கொட'ச் சத்தமாயிருக்கும். பலர் ஒவ்வொரு யந்திரத்தின் பக்கத்திலும் உட்கார்ந்து, காது கொடுத்து அந்தச் சத்தத்தைக் கேட்டு, பாரங்களில் எழுதிக்கொண்டிருப்பார்கள்; கண்ணும் கருத்தும் அதே வேலையில் ஈடுபட்டிருக்கும். சிறிது கவனக் குறைவாயிருந்து, 'தவலை போச்சு' என்பதற்குப் பதிலாக, 'தலை போச்சு' என்று எழுதி விடக் கூடாதல்லவா?

'கட்டு—கட' (—.) என்ற இரு விதச் சத்தங்களை வெவ்வேறு விதமாக A முதல் Z வரையுள்ள எழுத்துக்களுக்கும், 1 முதல் 0 (சைபர்) வரையுள்ள எண்களுக்கும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்கு 'மோர்ஸ் சமிக்ஞை' (Morse code) என்று பெயர். இந்தச் சமிக்ஞை பாஷையை முதன் முதலில் கண்டு பிடித்தவர் 'மோர்ஸ்' என்பவர். ஒவ்வோர் எழுத்துக்கும் சிறு வித்தியாசமே உண்டு. கவனமாகக் கேட்டு எழுதாவிட்டால், எழுத்துக்கள் மாறிவிடும்.

தந்தி நிலையத்தில் மற்றொரு புறம் "டெலிபிரிண்டர்" என்ற யந்திரங்கள் வேலை செய்வதையும் காணலாம். டைப் அடிக்கும் மிஷின் பார்த்திருக்கிறாயல்லவா? அதே போன்ற மிஷின்தான். ஆனால் இங்கிருந்து அடிக்கும் செய்திகளை மற்றோர் ஊரிலும், அங்கிருந்து அடிப்பனவற்றை இங்கும் டைப் அடித்து விடுகிறது. இந்த டெலிபிரிண்டர் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் செய்திகள் இன்னும் விரைவாக அனுப்பப் படுகின்றன. பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலோ, அல்லது பக்கத்து ஊர்களிலோ, நமது நண்பர்கள், உறவினர்கள் இருந்து அங்கிருந்து அவர்கள் தங்கள் சுக துக்கச் செய்திகளைத் தந்தி மூலம் அறிவித்தால், ஒரு

சில மணி நேரங்களில் நமக்கு அறிவிக்கச் செய்யும் முக்கியமான ஸ்தாபனத்தில் நான் வேலை பார்க்கிறேன். எங்கள் வேலையில், குறித்த நேரத்தில் அலுவலகத்திற்குச் சென்று, குறித்த நேரத்தில் வேலை முடிந்து வீடு திரும்ப வேண்டியது மிக முக்கியம். ஒரு சில நிமிடங்கள்கூடத் தாமதித்துச் செல்லக் கூடாது.

நான் குடியிருக்கும் வீட்டிற்கும், அலுவலகத்திற்கும் சுமார் இரண்டு மைல்கள் இருக்கின்றன. தினசரி டவுன் பஸ்ஸில் சென்று திரும்புவேன். ஒரு நாள் வழக்கம் போல் நான் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயம், ஒரு பெரிய மனிதர் என்னை ஓர் அவசர காரியமாகச் சந்திக்க விரும்புவதாகத் தகவல் கிடைத்தது. அவசர, அவசரமாக உடைகளை மாற்றிக்கொண்டு அவரைக் காணச் சென்றேன். ஒரு சில நிமிடங்கள் அவருடன் பேசி விடை பெற்றுக்கொண்டு, ஓடோடியும் குறுக்கு வழியில் பஸ் ஸ்டாப்பை அடைந்தேன். அதே சமயத்தில் டவுன் பஸ் ஒன்று வந்து நின்றது. தாவி ஏறி, இடம் பிடித்துக் கொண்டேன். அந்தக் காரில் சென்றால் சரியான நேரத்திற்கு வேலைக்குப் போய்ச் சேரலாமென உணர்ந்து மகிழ்ந்தேன். ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. கண்டக்டரிடம் டிக்கட்டு வாங்குவதற்காகப் பையைத் தடவிப் பார்க்கும்பொழுது தான் திகீரென்றது. அவசரத்தில் உடைமாற்றும் பொழுது, சில்லறை எடுத்துவர மறந்துவிட்டேன். இதை அறிந்ததும் மனம் திடுக்குற்றது. இனி என்ன செய்வது? காரிலோ தெரிந்தவர்கள் யாரும் இல்லை. அடுத்த ஸ்டாப்பில் இறங்கி ஒன்றரைமைல் தூரம் நடந்து அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியது தான் என்ற முடிவிற்கு வந்தேன். வெள்ளை வேஷ்டியும் புஷ் ஷர்ட்டும் தடபுடலாக அணிந்து கொண்டு, ஒன்றரை அணாக் காசில்லாமல் கீழே இறங்குகிறானே என்று பலர் பார்த்து நகைப்பார்களே என்ற அவமான உணர்ச்சியும் மேலிட்டது. ஆயினும் என்ன செய்யலாம்? குறைந்தது அரை மணி நேரமாவது தாமதமாகத்தான் அலுவலகம் போய்ச் சேர முடியும். எனது பதினைந்து ஆண்டு உத்தியோக வாழ்க்கையில் ஒரு நாள் கூட இது மாதிரி நேரம் கழித்துச் சென்றதில்லை. கடமையினின்று ஒரு சிறிதும் தவறியதில்லை. எனவே மனம் பலவாறு தத்தளித்துக்கொண்டிருந்தது.

என் பரபரப்பைக் கண்ட கண்டக்டர் காசு கொண்டு வராமல் திண்டாடும் எனது இக்கட்டான நிலையை ஒருவாறு ஊகித்துக் கொண்டார். ஒன்றரை அணா டிக்கட் ஒன்றைக் கிழித்து என்னிடம் கொடுத்து, "சார்! நீங்கள் மறுமுறை என்னைப் பார்க்கும் பொழுது, இந்தப் பாக்கியைக் கொடுத்தால் போதும்" எனக்கூறி, தன் பையிலிருந்து ஒன்றரை அணா எடுத்துப் போட்டுக் கொண்டார். அப்பொழுது என் மனநிலை எவ்வாறு இருந்திருக்குமென ஊகித்துப் பார். கடவுளே நேரில் வந்து உதவி செய்தது போன்றிருந்தது. அணா ஒன்றரை, சிறு தொகை தான். எனக்கோ, அந்தக் கண்டக்டருக்கோ அந்தத் தொகை ஒரு

பெரிதல்ல. ஒரு நாளைக்கு எத்தனையோ ஒன்றரை அணுக்களைச் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். ஆயினும் அந்த அற்பத் தொகையில்லாமல், ஒரு சில விநாடிகள் என் மனம் என்ன பாடுபட்டது! கண்டக்டர் இந்த உதவி செய்ய வேண்டுமென்று என்ன கட்டாயம்? அடுத்த ஸ்டாப்பில் இறக்கி விட்டிருந்தால் நான் நடந்துதானே சென்றிருக்க வேண்டும்? சுமார் அரை மணி நேரம் தாமதித்துத்தானே அலுவலகம் சென்றிருக்க முடியும்? கால தாமதத்திற்குச் சமாதானம் எழுதிக் கொடுத்துத்தானே ஆகவேண்டும்? உன்னைப்போன்ற பள்ளிப்பிள்ளைகள், பள்ளிக்கூடத்திற்கு நேரம் கழித்து வந்து, வாத்தியார் "ஏண்டா, லேட்?" என்று கேட்கும் பொழுது "லேட்டாப் போச்சு சார்" என்று மழுப்பிப் பதில் கூறுவதுபோல் சமாதானம் கூறித் தப்பித்துக் கொள்ள முடியாதே! ஒருவருக்கு தந்தி வந்து, வேகமாக ரெயிலடிக்கு ஓடியிருப்பார். ஆயினும் ஐந்து நிமிடங்களுக்கு முன்பே ரெயில் போய் விட்டதையறிந்து, "ஐயோ! இந்தத் தந்தி ஐந்து நிமிடங்களுக்கு முன்



கிடைத்திருந்தால், இந்த ரெயிலில் போயிருப்பேனே! இனி அடுத்த ரெயிலில் சென்றால் அண்ணனை உயிருடன் காண முடியுமோ, முடியாதோ?'' என்று புலம்பிக் கொண்டிருப்பாரே!

கண்டக்டர் செய்த உதவி, தொகையளவில் சிறிதுதான். ஆனால் எனக்கு அது தக்க காலத்தில் செய்த பெரிய உதவியல்லவா? அந்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்ய இயலும்? அந்தக் கண்டக்டரையும் அவர் செய்த பேருதவியையும் என்றேனும் நான் மறக்க முடியுமோ? அவர் பிரதிப்பிரயோஜனம் ஏதாவது எதிர்பார்த்தா எனக்கு அந்த உதவியைச் செய்தார்? அல்லது அதிகாரத்திற்குப் பயந்து கொண்டு செய்தாரா? ஒன்றுமில்லை. இந்த நில உலகம் மிகப் பெரியது என்பதை நீ அறிவாய். ஆனால் வள்ளுவப் பெருமான் என்ன கூறுகிறார் தெரியுமா? இந்த நில உலகத்தைக் காட்டிலும் பெரிய பொருள் ஒன்று உள்ளது எனக் கூறுகிறார். அது என்ன தெரியுமா? இந்தக் கண்டக்டர் செய்தது போன்று, "ஒருவனுக்கு இன்றியமையாத வேண்டப்பட்ட காலத்தில் செய்த உதவி, அளவில் சிறியதாயிருந்தாலும், அதன் தன்மையைக் கருதும்போது, அது இந்த நில உலகத்தைக் காட்டிலும் பெரிது'' என்று வெகு அழகாகக் கூறுகிறார். இது போன்ற நல்ல கருத்துக்களடங்கிய குறட்பாக்களை நீ மனப்பாடம் செய்ய வேண்டாமா? இந்தப் பாட்டையாவது உடனே மனனம் செய்: "காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது.''

பொய்

குற்றவாளி ஒருவனைச் சிரச்சேதம் செய்ய அரசன் ஆணையிட்டான். தண்டனை விதிக்கப்பட்டவன் அரசனை ஆத்திரம் தீரத் திட்டினான். அவன் தன் சொந்த மொழியில் திட்டியதால் அரசனுக்கு அர்த்தம் விளங்கவில்லை. குற்றவாளி அந்நிய நாட்டினன்.

குற்றவாளி என்ன சொல்லுகிறான் என்று மன்னன் தன் முதல் மந்திரியைக் கேட்டான்.

"அரசே! 'கோபத்தை அடக்க வேண்டும். ஏழையிடம் இரக்கம் காட்டவேண்டும். வரையாது வழங்கும் வள்ளலாக விளங்க வேண்டும். இவ்வளவு குணங்களையும் படைத்தவனை இறைவன் விரும்புகிறான்' என இந்தக் குற்றவாளி கூறுகிறான்'' என்றான் முதல் மந்திரி.

மன்னன் மனம் பெரிதும் இரங்கியது. குற்றவாளியை மன்னித்தான்.

குற்றவாளியின் பாஷை புரிந்த மற்றொரு மந்திரி, "அரசே, இந்தக் குற்றவாளி தங்களைத் தகாத வார்த்தைகளால் திட்டுகிறான்'' என்று உண்மையில் அவன் சொன்னவைகளை எடுத்து அரசனுக்குச் சொன்னான்.

அரசன் சொன்னான்:

"முதல்மந்திரி கூறிய பொய் நீர் மொழிந்த உண்மையை விட அழகாக இருந்தது. ஏனெனில் அவர் அவனைக் காப்பாற்ற விரும்பினர். நீர் அவனைக் கொல்ல நினைத்தீர். நன்மை தரும் பொய்யைவிட தீமை தரும் மெய் சிறந்ததல்ல. நன்மை தரும் பொய்யே தேவலை!''

—குலிஸ்தான் கதை.

தோழிக்கு

சசிதேவி

அன்புள்ள உமா, வணக்கம்.

உனது கடிதம் கிடைத்தது. அஜந்தாவைப் பார்த்து விட்டு வந்து அதைப்பற்றி விவரமாக எழுதும்படி கட்டளையிட்டிருக்கிறாய். அஜந்தாவுக்குச் சென்றேன்; கண்கொள்ளாக் காட்சிதனைக் கண்டேன்; இதோ எழுதி விட்டேன்.

சிகந்தராபாத்திலிருந்து மாலை ஆறு மணிக்குப் புறப்பட்டு ஔரங்காபாத்துக்கு மறுநாள் காலை போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்து தான் அஜந்தா, எல்லோராவுக்குப் போகவேண்டும். ஔரங்காபாத் மிகவும் மோசமாகத்தான் தோன்றும் தமிழர்களுக்கு. சப்பாத்தியை மெல்ல முடியாமல் திண்டாடுவோம்.

ஔரங்காபாத்திலிருந்து அஜந்தா எழுபது மைல் தூரத்தில் உள்ளது. நாங்கள் ஒரு டாக்ஸியில் புறப்பட்டோம். பாதையெல்லாம் ஒரே புழுதி. உடம்பிலிருந்து வழித்தெடுத்தால் வண்டிப் புழுதி கிடைக்கும். வழியெங்கும் அழகான காட்சி. ஒரு புறம் ஓங்கி உயர்ந்த பாறைகள், மலைகள். மறுபுறம் கிடுகிடு பாதாளம். சமதரையில் புஞ்சைப்பயிர் சிறிது தலை காட்டியது. இங்கொன்றும், அங்கொன்றுமாய் மலைத் தொடர்கள். டாக்ஸியில் போகும் நம்மைத் தவிர வேறு ஈ காக்கையைக்கூடக் காண்பது அபூர்வம். வலி உடம்பை வதைக்க, புழுதி வீச, தலை மயிர் காற்றில் பறக்கப் பிரயாணம் செய்தோம்.

அஜந்தாக் குகைகளை அடைந்ததும் நாங்கள் காரிலிருந்து இறங்கினோம். எவ்வளவு பஸ்கள், எவ்வளவு கார்கள், எவ்வளவு ஜனங்கள்! படிக்கட்டுகளேறி குகைக்குள் நுழைந்தோம். சூரியனைக் கண்ட பனி போல் - தவறு - அமுத கிரணங்களைப் பொழியும் சந்திரனைக் கண்ட இருளைப்போல் உடல் வலி மாயமாய் மறைந்து விட்டது. இவ்வளவு நேரம் புழுதியில் அடிபட்டு வந்தது மறந்து போயிற்று; திரும்பவும் அப்புழுதியில் செல்ல வேண்டுமே என்ற நினைவேயில்லை. ஆம்; அஜந்தாப் பொக்கிஷங்கள்தான் நம்மை அந்த நிலைக்குக் கொண்டு வருகின்றன.

மொத்தம் இருபத்தொரு குகைகள் இருக்கின்றன. சிலவற்றில் சிற்பம், பலவற்றில் சித்திரம், மற்றவை ஓவியர்கள் தங்குமிடங்கள். புத்த பிக்ஷுக்கள் தான் இதை வரைந்தவர்கள். மூலிகைகளைக் கொணர்ந்து அரைத்து, வர்ணம் உண்டாக்கி அதனைக் கொண்டு சித்திரம் வரைந்துள்ளனர். வர்ணம் குழைத்த குழிகள் கூட அங்குள்ளன. சித்திரக் கருவூலம் அஜந்தா.

ஆனால் அவற்றைப் பார்க்கும் போது நமது மனத்தில் வருத்தம் ஏற்படாதிருக்க முடியாது. கால



தேவனின் கைவரிசையாலும், மக்களின் கைவரிசையாலும் சித்திரங்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. உள்ள சித்திரங்கள் சிலவே. அவையும் நடு நடுவே உதிர்ந்துள்ளன. மீதியில் மக்கள் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர். தம் பெயர்களைச் சில சித்திரங்களில் எழுதியிருக்கின்றனர். இப்போது அரசாங்கத்தார் அவற்றைக் கண்ணாடி போட்டுப் பாதிகாத்து வருகின்றனர். அதற்கு முன்பேயே அந்தச் சித்திரங்கள் மிகவும் பழுதடைந்துவிட்டன. ஆயினும், இப்போதும் அதைக் காண்பவர் மனம் மயங்குதல் இயற்கையே.

இருப்பவைகளைக்கொண்டே நம் முன்னோர்களின் திறமையையும், பெருமையையும் ஒருவாறு அறிய முடிகிறது. மலையைக் குடைந்து குகையை அமைத்த அற்புதத்தைச் சொல்லவா? அவற்றில் இயற்கையை அப்படியே பெயர்த்து அடைத்துள்ளார்களே, அதைச் சொல்லவா? ஆம்; இயற்கையை அடைத்துள்ளார்கள். அப்போது குளிர் காலமாதலால் செடிகொடிகள் பூத்துக் குலுங்கவில்லை. சுற்றிலும் ஒரே வறட்சி. ஆனால் உள்ளே அதற்கு நேர்மாறான காட்சி. சுற்றிலுமுள்ள செடிகள் பூத்திருப்பதால் நமக்குப் பிரமையே ஏற்படுகிறது. இவற்றில் உண்மையான பூ, செடி, கொடி எது என்று எனக்குச் சந்தேகம். 'ஒரு வேளை இந்தச் செடிகொடிகளிலுள்ள பூக்கள் மற்றக் கொடிகள் முதலியவற்றையெல்லாம் உள்ளே வைத்துவிட்டதால்தான் இவை வெறும் வெளித்தோற்றங்களாகப் போய்விட்டனவோ!' என்று அவ்வளவு தத்ரூபம். சித்திரங்களைப் பார்க்கிறோம் என்ற நினைவே மனத்தில் ஏற்படுவதில்லை. பூக்களைப் பறிக்க எண்ணிக் கை நீட்டுவோம். ஆனால் சுற்றுப்புறத்திலிருந்து எழும் ஒலிக் குரல்கள் நம்மை இவ்வுலக நினைவிற்குக் கொண்டு வருகின்றன. கையை மடக்குகிறோம், நமது பேதமையை எண்ணி. ஓவியனின் திறமையை வியந்தபடியே பெருமூச்செறிகிறோம். கூரையிலும் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. பலவித

'டிசைன்'கள். அநேகமாய்ப் பூக்களில் வெண்ணிறமே காணப்படுகிறது. வேறு வர்ணம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் வெண்ணிறத்தின் மேலேயே தீட்டியுள்ளனர்.

என்ன ஆச்சரியம்! சித்திரங்களின் வர்ணம் மங்கவேயில்லை. இன்றுதான் வரையப்பட்டதோ எனத் தோன்றுகிறது. இதனால் மனிதர்களையோ, மிருகங்களையோ பூக்களையோ நேரில் காணும் அநுபவந்தான் ஏற்படுகிறது. இயற்கையைச் சிருஷ்டித்த கடவுளே மனித உருவெடுத்து வந்து இவற்றை எல்லாம் வரைந்திருக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதில் வியப்பில்லை. ஆனால் கடவுள் வந்து வரையவில்லை. புத்த பிக்ஷுக்கள்தான் வரைந்தவர்கள் என்பது நமக்குத் தெரியும். எனவே பிக்ஷுக்கள் தெய்வாம்சம் பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை. அவர்கள் நமது முன்னோர்கள் என்பதில் நாம் பெருமை கொள்கிறோம்.

சிபியின் கதை, உபதேசிக்கும் புத்தர், தியான புத்தர், அவருடைய பிரதம சிஷ்யர்களான சாரிபுத்தாவும், மொகல்லானுவும் புத்த மதத்தைப் பிரசாரம் செய்வது, அதைக் கேட்கக் கூடியிருக்கும் பல தேச மக்கள், மன்னர்கள், பரிவாரங்கள் முதலிய அநேக சித்திரங்கள் நம்மை நகரவொட்டாதபடி தடுத்து நிறுத்து



கின்றன. இவைகளில்தான் என்ன பாவம், என்ன ஒய்யாரம்! அரசர்களின் ஆபரணங்கள்..அடாடா. இவ்வளவு மணிகளும் இன்னும் பளபளப்பாக, மங்காது ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றனவே.

இன்னொரு அதிசயம் கேள்! ஆங்கிலேய நாகரிகம் என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோமே, அதெல்லாம் பாரத நாட்டில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே இருந்திருக்கின்றன. தலையை மூடும் வலை, 'பூட்ஸ்' அணிவது, நர்ஸ் உடை, மடக்கு நாற்காலி, இன்னும் புது மோஸ்தர்கள் எல்லாம் உண்டு.

உபதேசம் கேட்கும் ஒவ்வொரு தேச மக்களையும் 'போட்டோ' பிடித்து விட்டார் ஓவியர். புத்தர் யசோதரையிடம் யாசகம் பெறுவதுபோல ஒரு சித்திரம் வரையப்பட்டிருக்கிறது. அலங்காரப் பெண்கள் பார்க்கவேண்டியது அது.

இனி, சிற்ப விசித்திரத்திற்கு வருவோம். நிர்வாண நிலையையடைந்த புத்தர், மஹா விஷ்ணு சேஷசயனம் கொண்டிருப்பது போல் பள்ளி கொண்டிருக்கிறார்; தேவர்களும் மற்றோரும் துதிக்கின்றனர். புத்தர் மஹாவிஷ்ணுவின் அவதாரம் என்று சிலர் கூறுவது உண்மை என்று காட்டுவதுபோல இந்தச் சிற்பம் அமைந்திருக்கிறது.

இன்னொரு புத்தர் சிலை வேலைப்பாட்டுடன் ஒரு குகை வாயிலின் மேற்புறத்தில் செதுக்கப்பட்டிருக்கிறது. சிறிது தூரம் சென்றபின் அதை மீண்டும் திரும்பிப் பார்த்தேன். அப்படியே திடுக்கிட்டுவிட்டேன். ஒரு கணம், 'ஓடிப்போய்த் தாங்கிக்கொள்ள

மண்பொம்மை செய்பவர்: (தன் நண்பரிடம் பெருமையாய்) என் மூளையை உபயோகித்தேன் என்றால் எத்தனை விதமான பொம்மை செய்யலாம் தெரியுமா?

நண்பர்: அவ்வளவு இருக்கிறதா!

லாமா?' என எண்ணினேன். புத்தர் விழுந்துகொண்டிருந்தார். ஆமாம். உண்மையாகத்தான்.. தொலைவிலிருந்து பார்க்கும்போது அவ்வாறுதான் தோன்றிற்று. அருகில் பார்க்கும்போது சற்றே சாய்ந்தாற்போலிருந்த புத்தர் சிலைதான் இப்படிக் கண்களை ஏமாற்றிவிட்டது எனத் தெரிந்தது. என்ன அற்புதம்!

முதல் குகையில் கர்ப்பக்கிருகத்தில் புத்தர் அமர்ந்திருந்தார். அதன் எதிரே விளக்கை வைத்தனர். கர்ப்பக்கிருகம் இருட்டாயிருக்கும் என்பது தெரிந்ததுதானே! புத்தர் சாந்த ஸ்வரூபியாய், கண்மூடி மோனத்தில் ஆழ்ந்திருந்தார். 'ஆஹா' என்றோம். விளக்கைச் சிலையின் இடதுபக்கம் வைத்தவுடன் இதென்ன ஆச்சரியம்! மோன புத்தர் புன்சிரிப்பு ஒன்றை உதிர்த்தார். மனிதன்தான் அழுவான்; மறு கணமே சிரிப்பான். சிலைகூடவா அப்படிச் செய்யும்!

தூண் ஒன்றில் மற்றோர் அருமையான சிற்பம். நான்கு வெவ்வேறு மிருகங்களுக்கும் ஒரே தலை. அலங்காரப் பெண்ணொருத்தி, அப்பப்பா! அவள் இடை ஒடிந்துவிடுமோ எனும்படியாய் வளைந்து ஒய்யாரமாய்ச் சாய்ந்துகொண்டிருக்கிறாள். சாய்ந்த நிலையில் கையில் கண்ணாடி ஒன்றையும் ஏந்திக்கொண்டு அலங்காரத்தில் ஈடுபட்டு விட்டாள். இவ்வுலகச் சிந்தனையேயில்லை! இல்லாவிடில் இவ்வளவு பேர் வந்திருந்தும் அவள் அலங்காரத்தை விட்டு எழுந்திருக்காமலிருந்திருப்பாளா?



தாத்தா: டேய் மணி! கண்டங்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

மணி: மூன்று வகைப்படும். அவை நீர்க்கண்டம், நெருப்புக் கண்டம், எமகண்டம்!

அஜந்தாவைச் செயற்கை—இயற்கை எனலாம். இயற்கையைச் செயற்கையால் குகைகளில் அடைத்து விட்டனர். அங்குள்ளவை கற்களுமல்ல, வர்ணமுமல்ல. முதலில் அவை அப்படித்தானிருந்தன. ஆனால் இப்போது அவை சிற்பியினாலும், ஓவியராலும் நம்முடன் பேசும் உயிரினங்களாக்கப்பட்டு விட்டன. அவை நமக்குக் கதைகள் கூறுகின்றன. கதைகளைக் கேட்கலாம். கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

உமா, எனக்குத் திரும்பிவர மனமில்லைதான். ஆனால் என்ன செய்வது! நல்ல சாப்பாடு கிடைக்கட்டும்; உன் கட்டளையை நிறைவேற்றவேண்டுமே. அதற்காகத் திரும்பி வந்தேன்.

உன் அருமைத் தோழி, சசி.

நல்லதீர்ப்பு

தியாகராஜன்

மொகலாயச் சக்கரவர்த்தி ஜஹாங்கீர், அக்பருக்குப்பின் பட்டத்துக்கு வந்தவர். நியாயம் தவறாது அவர் ஆண்டு வந்தார். குடிகளை மிகவும் அன்புடன் நடத்திவந்தார்.

ஜஹாங்கீர் தம் குடிகளுக்கு நேரடியான நியாயம் வழங்கக் கருதி, கோட்டை வாயிலில் மணி ஒன்று கட்டுவித்தார். தம் குறைகளை அரசரிடம் தெரிவிக்க விரும்புபவர்கள் மணியை அடிக்க வேண்டும். அவர்களை அரசர் கூப்பிட்டு விசாரணை செய்து அவர்களுடைய குறையைப் போக்க முயல்வார்.

ஒரு நாள் ஒரு வண்ணான் மனைவி அந்த மணியை அடித்தாள். மணி ஓசையை ஜஹாங்கீர் கேட்டதும் மணியடித்தவரை உள்ளேவர விடுமாறு உத்தரவிட்டார். வண்ணாத்தியைக் காவலர்கள் அரசருக்கு எதிரில் அழைத்துவந்தனர்.

அரசர் அவளிடம், ''அம்மணி, நீ ஏன் மணியை அடித்தாய்? உன்னுடைய குறை என்ன? அதைத் தெரிவித்தால், அதைத் தீர்த்து வைக்க முயல்வேன்'' என்றார்.

வண்ணாத்தி, ''அரசே, என் கணவர் துணிகளை வெளுத்துக் கொண்டிருந்தபோது உங்கள் கோட்டையிலிருந்து ஒரு குண்டு

வெகு வேகமாக வந்து என் கணவர் முதுகில் பாய்ந்து அவரைக் கொன்று விட்டது'' என்று தெரிவித்தாள்.

உடனே ஜஹாங்கீர் குண்டை வீசியது யார் எனக் கண்டு பிடிக்குமாறு காவலர்களை அனுப்பினார். கடைசியில், ஜஹாங்கீரின் அருமை மனைவியும் பட்டத்து ராணியுமாகிய நூர்ஜஹான்தான் அதைச் செய்தது எனத் தெரிய வந்தது.

இதை அறிந்து கொண்ட சபையோர், அரசனது தீர்ப்பை எதிர்நோக்கி, கவலையுடன் காத்திருந்தனர். அங்கே கூடியிருந்த மக்கள் அனைவரும், 'இப்பொழுது நம் அரசர் என்ன செய்வார், பார்ப்போம்!' என எண்ணினார்கள்.

ஜஹாங்கீர் உடனே ஒரு துப்பாக்கியைக் கொண்டுவந்து, அது முழுவதையும் குண்டுகளால் நிரப்பினார். அதை இறந்த வண்ணான் மனைவியிடம் கொடுத்தார். "யாராயிருந்தாலும் குற்றம் குற்றம்தான். அதை மாற்ற முடியாது. என் மனைவி உன் புருஷனைக் கொன்றதுபோல், நீயும் அவள் புருஷனைக் கொல். அவர் புருஷனாகிய நான் இதோ உன் முன்னால் இருக்கிறேன். நீ என்னைக் கொல்ல வேண்டியதுதான் நியாயம்'' என்று கூறினார். இதைக் கேட்ட சபையினர் திடுக்கிட்டனர். வண்ணாத்தியும் திடுக்கிட்டாள்.

பிறகு அவள், "அரசே, நான் அப்படிப் பழி வாங்க விரும்பவில்லை. அரசி என் கணவனை வேண்டுமென்றே கொல்லவில்லையே! தெரியாமல் நடந்துவிட்ட தவறு அது. ஆனால் நான் தெரிந்தே உங்களைக் கொல்வது எப்படி நியாயமாகும்? நான் உங்கள் மனைவியை மன்னிக்கிறேன்'' என்றாள்.

இதைக் கேட்ட சபையினர் பெருமூச்செறிந்தார்கள். வண்ணாத்தியின் பெருங் குணத்தை எண்ணி வியந்தார்கள்.

ஜஹாங்கீர், "அம்மணி, உன் உயர்ந்த குணத்தைப் பாராட்டுகிறேன். நான் என் மனைவிக்குப் பல கிராமங்களை அளித்திருக்கிறேன். அவற்றில் பாதியை நீ எடுத்துக்கொள்'' என்று உத்தரவிட்டார்.

அசடு வழிந்தது

என். ராமகிருஷ்ணன்

பள்ளிக்கூட மணி அடிக்க இன்னும் பதினைந்து நிமிஷங்கள் இருந்தன. பள்ளிக்கு அருகே மணியும் கிட்டுவும் பேசிக்கொண்டிருந்தார்கள். "டேய் மணி! சரஸ்வதி தியேட்டரில் புதுசா ஒரு படம் ரிலீஸாகியிருக்கு. போகலாமா? என்றான் கிட்டு.

"மாட்னி ஷோவா! மத்தியான்னம் ஸ்கூலுக்குப் போகாமே சினிமாவுக்குப் போனா, 'ஆப்ஸென்ட்' விழும். அதோடு என் தம்பிக்குத் தெரிஞ்சா எங்கப்பாக்கிட்டே சொல்லிவிடுவானே! என்ன செய்யறது?" என்றான் மணி.

"சும்மா வாடா, அதெல்லாம் ஒண்ணும் தேடமாட்டான். சாப்பிட்டதும் நேராக ஸ்கூலுக்குப் போறமாதிரி தியேட்டருக்கு வந்துடு" என்றான் கிட்டு.

* * *

மணியும் கிட்டுவும் பேசிக்கொண்டபடி மத்தியான்னம் தியேட்டரில் சந்தித்தார்கள். ஜோராகச்சினிமாப்பார்த்தார்கள். சினிமா முடிந்தது. மணி ஆறாயிற்று. "கிட்டு, வீட்டிலே கேட்டா என்னடா பதில் சொல்லறது?" என்றான் மணி.

"பூ! இதுக்குத்தானா! போடா முட்டாள்! இதுகூடவா சொல்லத்தெரியாது! ஸ்கூல் விட்டதும், விளையாடிட்டு வர்றேன்னு சொல்லுடா!" என்று யோசனை சொல்லிக்கொடுத்தான் கிட்டு.

"சரிடா, அப்படியே சொல்றேன்" என்றான் மணி.

* * *

வீட்டு வாயிலில் தன் தந்தையும் தம்பியும் நிற்பதைக் கண்ட மணிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"எண்டா, இவ்வளவு லேட்?" என்றார் அவன் தந்தை. "ஸ்கூல் விட்டதும், விளையாடிட்டு வர்றேனப்பா" என்றான் மணி.

"ஓகோ! ஸ்கூல் விட்டதும் விளையாடிட்டு வர்றியோ? ஒழுங்காக, மரியாதையா பதில் சொல். எங்கே போனே மத்தியானம்?"

"ஸ்கூலுக்குத்தான் அப்பா, போனேன்?" என்றான் மணி.

அவன் முதுகில் இரண்டு ஷொட்டுக் கொடுத்தார் மணியின் தந்தை.

"டேய் மணி, இந்த வயசிலேயே பொய் சொல்லக் கற்றுக் கொண்டாயே. யாரோ உங்க ஸ்கூல் சம்பந்தப்பட்ட அதிகாரி இறந்ததை முன்னிட்டு, மத்தியான்னம் உங்க ஸ்கூல் லீவ் விட்டாச்சுன்னு, உன் தம்பி வந்துட்டான். நீ என்னடான்னா, விளையாடிட்டு வர்றேங்கிறே!" என்றார் தந்தை.

மணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. "அட கடவுளே, நான் சினிமா போற அன்னிக்கா ஸ்கூல் லீவு விடணும்?" என்று நினைத்துக்கொண்டான். அவன் முகத்தில் அசடு வழிந்தது.

மறைந்த மோதிரம்

எஸ். என். கே. ராஜன்

டிங்!..டிங்!..!டிங்!..டிங்!

கோயம்புத்தூர் காந்தி வித்தியாலயம் உயர்நிலைப் பள்ளியின் ஹாஸ்டலில் 'காலை ஆகாரம் தயாராகிவிட்டது!' என்பதை அறிவிக்க மணி கண கணவென்று ஒலித்தது.

எப்பொழுது சாப்பாட்டு மணி அடிக்கும் என்று பசியோடு எதிர்பார்த்திருந்த மாணவர்கள் மணியோசையைக் கேட்டதுதான் தாமதம், வாரியடித்துக்கொண்டு எழுந்து சாப்பாட்டு விடுதியை நோக்கி வேக நடை போடலானார்கள்.

'நான் முந்தி, நீ முந்தி' என்று போட்டி போட்டுக்கொண்டு கை, கால்களைக் கழுவிக்கொண்டபின் அவரவர்கள் இடத்தில் போய் அமர்ந்தார்கள்.

கடைசியாகக் குழாயடியில் மீந்தவர்கள் மூன்று பேர். அவர்கள் தங்களது வேலையைச் சாவதானமாக முடித்துக்கொண்டு, சாப்பிடப் போனார்கள்.

சமையல்காரன் எல்லோருக்கும் முதலில் பூரி, உருளைக்கிழங்கைப் பரிமாறினான்.

பிறகு காபி வந்தது. ஒவ்வொருவரும் தங்களிடமிருந்த டம்ளர்களில் ஆவி பொங்கும் காபியை வாங்கிக்கொண்டனர்.

அங்கு ஒரு மூலையில் அமர்ந்திருந்த நாராயணன் என்ற மாணவன் திடீரென்று தொண்டை கிழியக் கத்தினான். "ஐயையோ! என் மோதிரம்! எங்கேயோ காணவில்லையே!"

எல்லோருடைய பார்வையும் நாராயணனின் மேல் பாய்ந்தது!

"என்ன, என்ன? மோதிரத்தைக் காணவில்லையா?"

"இங்கு வரும்போது மோதிரத்தைப் போட்டுக்கொண்டு வந்தாயா?"

"கையிலிருந்த மோதிரம் திடீரென்று எப்படியப்பா மாயமாய்ப் போய்விடும்?"

"எங்கே விழுக்காட்டினாய் என்று நன்றாக யோசனை செய்து பார், நாராயணா!"

"அடடா! நீலக்கல் பதித்த அழகான மோதிரமப்பா!"

இவ்வாறு வியப்பு, பிரமிப்பு, பரிதாபம், கவலை ஆகிய உள்ளுணர்ச்சிகளை வெளிக் காட்டிய கேள்விகள் நாராயணனை நோக்கிக் கிளம்பின.

அடுத்தாற்போல மற்றொரு மூலையிலிருந்து ஒரு கூச்சல் கிளம்பியது.

"ஹை, இதென்ன? காபிக்குச் சர்க்கரையே போடலையே! ஐயைய! ஒரே கசப்பு! ஹூம்!"

அதைத் தொடர்ந்து எல்லாரும் கூச்சல் போட்டார்கள்.

மறு நிமிஷம் சமையல்காரன் சர்க்கரை டப்பாவுடனும், ஒரு ஸ்பூனுடனும் வந்து, ஒவ்வொருவருடைய காபி டம்ளரிலும் சர்க்கரையை அள்ளிப் போட்டுக்

கலக்கிக்கொண்டே வந்தான். நாராயணனை நோக்கி மீண்டும் கேள்விகள் பிறந்தன.

"நாராயணா! நீ அறையை விட்டு வரும் போது உன் விரலில் மோதிரம் இருந்தது நன்றாக நினைவிருக்கிறதா?" என்று கேட்டான் வெங்கடேசன்.

"ஆமாம், வெங்கிட்டு! குழாயில் கையலம்புவதற்கு முன்னால் கூட விரலில் மோதிரம் இருந்ததை நான் பார்த்தேன்!" என்றான் நாராயணன்.

"அப்படியானால் அது குழாயடியில்தான் விழுந்திருக்கும். போய்ப் பார்த்துவிட்டு வா. அக்கம் பக்கத்தில், ஜன்னல்-யில் எல்லாம் நன்றாகத் தேடிப்பார்!" என்றான் வெங்கடேசன்.

நாராயணன் பதைபதைப்புடன் எழுந்து குழாயடியை நோக்கி விரைந்து சென்றான்.

வெங்கடேசன் ஏதோ யோசனையில் மூழ்கினவனாய் உட்கார்ந்துவிட்டான்.

"இன்றைக்கு வெங்கிட்டுக்கு ஒரு சான்ஸ்!"

"துப்பறியும் சான்ஸைத்தானே சொல்லுகிறாய்?"

"ஆமாம்! துப்பறியும் நாவலைப் படித்துப் படித்து ஒரு ஷெர்லக் ஹோம்ஸாகவோ, ஒரு ஸெக்ஸ்டன் பிளேக்காகவோ ஆகலாம் என்பது அவனது அடக்க முடியாத ஆவல். அதற்கு இப்பொழுது நல்ல சான்ஸ் இல்லையா?"

"பாடபுத்தகங்களில் கேள்விகள் கேட்டால் சொல்லத் தெரியுமோ, தெரியாதோ! ஆனால் அவன் படித்து முடித்த நூற்றுக் கணக்கான துப்பறியும் நாவல்களில் எந்த மூலையிலிருந்தாவது ஒரு கேள்வி கேட்டால் டக்கென்று பதில் சொல்லிவிடுவான். நான் பந்தயம் வேண்டுமானால் கட்டுகிறேன்."

"ஆமாம், பின்னே சும்மாவா அவனுக்குத் துப்பறியும் வெங்கிட்டு என்று பெயர் வைத்திருக்கிறோம்?"

"சும்மா இருப்பா! நீ பேசி அவன் சிந்தனையை ஏன் கலைக்கிறாய்?"

சற்றுப் பொறுத்து மோதிரத்தைத் தேடப்போன நாராயணன் வந்து சேர்ந்தான்.

"ஊஹூம், அங்கெல்லாம் நன்றாகத் தேடிப் பார்த்துவிட்டேன். கிடைக்கவில்லை!" என்றான் நாராயணன் கவலை தோய்ந்த குரலில்.

"கை கழுவும் போது மோதிரம் விரலில் இருந்ததை நன்றாகக் கவனித்தாயா?"

"கவனித்ததாகத்தான் ஞாபகம்!"

"சரி, சரி! குழாயடியில் நீ கை கழுவும் போதுதான் அது கழன்று விழுந்திருக்க வேண்டும்! அது ரொம்பவும் தளர்த்தியாக இருந்ததா?"

"கொஞ்சம் தளர்த்திதான்!"

"அப்படியானால் நிச்சயம் அது அங்கேதான் விழுந்திருக்க வேண்டும். நீ குழாயடியிலிருந்து வந்த பிறகு யாராவது அங்கே போயிருக்க வேண்டும். அப்பொழுது அது அவர்கள் கண்ணில் தென்பட்டு எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் அது யார்?" என்று ஒரு பிரச்னையைக் கிளப்பிவிட்டு, தன்னைச் சூழ்ந்திருந்த எல்லோரையும் அர்த்த புஷ்டியுடன் ஒரு பார்வை பார்த்தான் வெங்கடேசன்.

"யாராவது மறுபடியும் குழாயடிக்குப் போனீர்களா?" என்றான்.

பதில் இல்லை; மௌனம்தான் நீடித்தது!

"உனக்குப் பிறகு கை, கால்கள் கழுவ யாராவது நின்றிருந்தார்களா?" என்று நாராயணனைப் பார்த்துக் கேட்டான்.

"எனக்குப் பின்னால் ரங்கசாமி தான் நின்றுகொண்டிருந்தான்!"

அப்பொழுது அங்கிருந்த ரங்கசாமி, "ஆமாம், நான்தான் கடைசியாக வந்தேன். ஆனால் நான் ஒன்றையுமே அறியேன். இவன் மோதிரத்தை அங்கே நான் பார்க்கவே இல்லை!" என்றான்.

"சரி, எதற்கும் எல்லோரையும் சோதனை போட்டால் நல்லது. நம்மீது சந்தேகம் வராதல்லவா?" என்றான் வெங்கடேசன்.

எல்லா மாணவர்களும் சோதனைக்குள்ளாயினர். ஆனால் ஒருவரிடமும் மோதிரம் கிடைத்தபாடில்லை!

அதற்குள் சீனு சர்க்கரை டப்பாவுடன் வெங்கடேசனை அணுகினான். சர்க்கரையை ஸ்பூனில் எடுத்து, வெங்கடேசனின் காபி டம்ளரில் போட்டுக் கலக்கிவிட்டு வெங்கடேசனுக்கு அருகில் அமர்ந்திருந்த ரங்கசாமியின் காபி டம்ளரில் சர்க்கரையைப் போட்டுக் கலக்கப் போனான்.

உடனே ரங்கசாமி, "ஊஹூம்! எனக்குச் சர்க்கரை வேண்டாம்!" என்றான்.

ஆச்சரியத்தால் அகல விரிந்த கண்களோடு வெங்கடேசன் ரங்கசாமியைப் பார்த்து, "என்ன ரங்கசாமி, சர்க்கரை இல்லாத கசப்புக் காபியை எப்படிக் குடிக்கப் போகிறாய்?" என்றான்.

"ரொம்ப நாளாக அப்படிக் குடித்துப் பார்க்கவேண்டும் என்று ஆசை. அதனால்தான் சர்க்கரை வேண்டாம் என்றேன்!" என்றான் ரங்கசாமி, அசட்டுச் சிரிப்புடன்.

"சரிதான்! நல்ல ஆசையப்பா இது!" என்று வியப்பால் வாயைப் பிளந்தான் வெங்கடேசன்.

சர்க்கரையில்லாத காபியைக் குடித்தான் ரங்கசாமி. காபி கசந்தது. குமட்டலெடுத்தது அவனுக்கு. மேலும் குடிக்க முடியாமல் காபி டம்ளருடன் அவ்விடம் விட்டகன்றான்.

"சரி, நான் எப்படியும் இந்தத் துப்பைத் துலக்கி, மாயமாய் மறைந்த மோதிரத்தைக் கண்டுபிடித்து, 'துப்பறியும் வெங்கிட்டு' என்ற பெயரை நிலை நாட்டிக் கொள்கிறேன்!" என்று பெருமிதத்துடன் கூறி, தன் அறையை அடைந்தான்.

அப்பொழுது ரங்கசாமி வெங்கடேசனின் அறையைத் தாண்டித் தன் அறைக்குச் சென்றுகொண்டிருந்தான். அறை வாசலில் நின்றுகொண்டிருந்த வெங்கடேசன் ரங்கசாமியைப் பார்த்தான்.

சிறிது நேரத்தில் பித்தம் தெளிந்தவனைப் போல அறையை விட்டகன்றான். ரங்கசாமியின் அறையை நோக்கி வேகமாகச் சென்றான்.

வண்ணான்: (பாட்டுக் கச்சேரி செய்தவரிடம்) ஐயா! ரொம்ப ரொம்ப நமஸ்காரமுங்க.

பாகவதர்: எதற்காக? ஏதாவது பண்டிகைக்குப் பணமா? அப்புறம் வா.

வண்ணான்: அதற்கில்லீங்க. நேத்து நீங்க பண்ணின கச்சேரியின்போது ஒரு மாதமாக ஓடிப் போன என் கழுதை வந்திருச்சுங்க!

ஆவணக் காப்பக நூலகம்
211710
சென்னை-600 008

அங்கே ரங்கசாமி உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். தன் அறைக்குள் திடீரென்று நுழைந்த வெங்கடேசனைப் பார்த்து, "என்ன, வெங்கிட்டு? ஏதாவது துப்புக் கிடைத்ததா?" என்று வினவினான்.

"உண்மையை நீ ஒப்புக் கொண்டால் துப்புத் துலங்கினாற் போலத்தான்" என்றான் வெங்கடேசன், பரபரப்புடன் ரங்கசாமியை இமை கொட்டாமல் பார்த்தவாறு.

அதற்குள் அக்கம் பக்கத்து அறையிலிருந்த மாணவர்களும் நாராயணனும் அங்கு வந்து கூடினர்.

ரங்கசாமி திடுக்கிட்டான். திக்பிரமை அடைந்தான். விழித்த கண் விழித்தபடி வெங்கடேசனைப் பார்த்து, "என்ன? நானா மோதிரத்தைத் திருடினேன் என்கிறாய்? உனக்குப் பைத்தியம் இல்லையே? சும்மா உளறாதே!" என்றான் உதடுகள் துடிக்க.

"இதோ பார், ரங்கசாமி! அந்த மோதிரம் உன்னிடம்தான் இருக்கிறது! பொய் சொல்லி ஏமாற்றப் பார்க்காதே! பிறகு நீயே ஏமாற்றமடைவாய்! உண்மையை ஒப்புக் கொண்டு திருடிய மோதிரத்தைக் கொடுத்து விடு. இல்லாவிட்டால் உன் அறை பூராவும் சோதனை செய்து...உம்...வீண் வம்பெல்லாம் எதற்கு?" என்று எச்சரித்தான் வெங்கடேசன்.

"எனக்குத்தான் ஒன்றுமே தெரியாதென்கிறேனே!" என்று கத்தினான் ரங்கசாமி.

"அப்படியானால் சோதனை போட வேண்டியதுதான்!"

"பிறகு நான் நிரபராதி என்று நிரூபணமானால் உன்னைச் சும்மா விடமாட்டேன்!"

"சரி, உன் இஷ்டப்படி செய்!" ஆனால் அதற்கு மாறாக இருந்தால் நீ தப்பிவிட முடியாது!" என்று கூறி, அறையைச் சோதனைபோட ஆரம்பித்தான்.

பெட்டி, படுக்கைகள் சோதனையிடப்பட்டன. பலனொன்றும் காணவில்லை. மேஜை டிராயரைத் திறந்து சோதனையிட்டான் வெங்கடேசன். அதிலிருந்த இரண்டு மூன்று அட்டைப் பெட்

டிகளைப் பார்வையிட்டான். பிறகு 'கலர் பாக்'ஸை எடுத்து, கலர்ப் பென்ஸில்களைக் கீழே கொட்டிப் பார்க்க அதன் அடியிலிருந்த பென்ஸில்களுடன் மோதிரமும் தொப்பென்று கீழே விழுந்தது!

எல்லோரும் 'ஆ'வென்று வாயைப் பிளந்தனர்!

நாராயணன் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தான்!

ரங்கசாமி திரு திருவென்று விழித்தவாறு, உடல் பதற, கை கால்கள் உதறலெடுக்க, முகம் குப்பென்று வியர்க்க நின்றான்!

"ரங்கசாமிதான் திருடினன் என்று எப்படிக் கண்டு பிடித்தாய், வெங்கிட்டு?" என்று எல்லோரும் ஒரே சமயத்தில் கத்தினர்கள்.

வெங்கடேசன் விஷயத்தை விளக்கினன்:

"நாராயணன் குழாயடிக்கு வரும் போது தன் கையில் மோதிரம் இருந்ததைப் பார்த்திருக்கிறான். அதனுல் அவன் கை கழுவும் போது அது அங்கேதான் விழுந்திருக்க வேண்டும் என்பது நிச்சயம்! நாராயணனுக்குப் பிறகு கை கழுவ நின்றவன் ரங்கசாமியே. அதனுல் கீழே விழுந்த மோதிரத்தை அவன்தான் எடுத்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்."

"அவனைத்தான் அப்பொழுதே சோதனை போட்டோமே?"

"அது அவன் செய்த தந்திரம். ஆனுல் அப்பொழுது அது எனக்கு விளங்கவில்லை!"

"என்ன அது?"

"சீனு அவன் காபி டம்ளரில் சர்க்கரையைப் போட்டுக் கலக்க வந்தபோது அவன் வேண்டாம் என்று மறுத்தானல்லவா? நான் ஏன் என்று கேட்டதற்கு, 'சர்க்கரை இல்லாத காபி குடித்துப் பார்க்க ஆசை' என்றான். ஆனுல் அது உண்மையல்ல. நான் சோதனையிட வேண்டும் என்றதும், தானும் அதற்கு உட்பட வேண்டும் என்று அஞ்சி, தன்னிடம் மோதிரம் இருந்தால் அகப்பட்டுவிடுமே என்று எண்ணி அதைக் காபி டம்ளருக்குள் போட்டிருக்க வேண்டும். சீனு சர்க்கரையைப் போட்டுக் கலக்கும் போது மோதிரம் ஸ்பூனுடன் இடிபட்டு ஓசை கிளம்புமல்லவா? அதைத் தவிர்க்கவே அவன் சர்க்கரை வேண்டாமென்று கூறிவிட்டான். சோதனை முடிந்தது. தான் நிரபராதி என்று காட்டிவிட்டான். பிறகு சர்க்கரை இல்லாத காபி பூராவையும் குடிக்க முடியாமல் அதைக் கொண்டு போய் வெளியில் கொட்டும் பாவனையில் மோதிரத்தை எடுத்து ஜேபியில் போட்டுக்கொண்டான். அவன் சட்டை கறையாகியிருப்பதை, அவன் என் அறையைத் தாண்டித் தன் அறைக்குச் சென்றபோது கண்டு பிடித்தேன். பிறகுதான் எப்படி எப்படி நடந்திருக்க வேண்டும் என்று அனுமானித்து, ரங்கசாமிதான் திருடியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்!" என்று கூறி முடித்தான் வெங்கடேசன்.

"சபாஷ்! உன் துப்பறியும் சாமர்த்தியமே சாமர்த்தியம்! 'துப்பறியும் வெங்கிட்டு' என்ற பட்டப் பெயர் உண்மையாகவே நிலைத்து விட்டது!" என்று ஆரவாரித்தனர் அனைவரும்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

B. 312. பாலசுந்தரம் G., கோயம்புத்தூர். 313. பாலகிருஷ்ண்ன் B., யாழ்ப்பாணம். 314. பூபதி விக்டோரியா, கொழும்பு. 315. பாலசுப்பிரமணியன் M., திருப்பத்தூர். 316. பானுமதிபாய் D., சேலம். 317. பாலசுப்பிரமணியன் R., கோலாலம்பூர். 318. பாலகிருஷ்ணன் S., எட்டயந் தோட்டா, இலங்கை. 319. பிரகதீஸ்வரன் V. S., சென்னை 1. 320. பாபூஜி., திருநெல்வேலி. 321. பாலகிருஷ்ணன் C., நாசரேத், 322. பெத்தபெருமாள், C. D., சண்முகநாதபுரம். 323. பூமிநாதன் M., சென்னை-4. 324. பாஸ்கரன் M. C., ராமநாதபுரம் 325. பாஸ்கரன் K., ஸ்ரீதரன் K. O. ஜயங்கொண்டம். 326. பஷீர் A., விருத்தாசலம். 327. பாலசுப்பிரமணியன் V. S., நாமக்கல். 328. புவனேஸ்வரி C., காரைநகர். 329. பாலசுப்பிரமணியன் K. S., கோயம்புத்தூர். 330. பாலசுப்பிரமணியன் T. K., சேலம். 332. பலராமன் V., சீனிவாசன், வெங்களத்தூர். 333. பாலகோபால் V. K., பம்பாய்-13. 334. பூமிநாதன் K., யாழ்ப்பாணம். 335. பிராட்டன் L., நீர்க்கொழும்பு. 336. பாலசுப்பிரமணியன் T. M., திருவாரூர். 337. பாலசுப்பிரமணியம் A., சிறுமதுரை. 338. பாலஜோதி., காரைக்கால். 339. பாலசுப்பிரமணியன் P., மண்டலமாணிக்கம். 340. பாபுஜி., பங்களூர். 341. பாலதண்டபாணி K. R., கீரனூர். 342. பாலகிருஷ்ணன் G., சென்னை 18. 343. பசுபதி S., நரசிம்மபுரம். 344. பிரபாகுமாரி K., திருவாரூர். 345. பானுமதி., திருவாரூர். 346. பாரதி A. V., கல்கத்தா 29. 347. பாலகிருஷ்ணன் L. S., தர்மபுரி. 348. பாலகிருஷ்ணன்., மேட்டுப்பாளையம். 349. பாலசுப்பிரமணியம் A., புதுச்சேரி. 350. பிரபாகரன் R., கோயம்புத்தூர். 351. பாலகிருஷ்ணன் M., சென்னை 4. 352. பாலகிருஷ்ணன் P. H., ராமநாதபுரம். 353. பாலஈஸ்வரன் A., நீர்வேலி. 354. பாலகிருஷ்ணன் G., திருச்சி. 355. பாபு S., சென்னை 4. 356., பாலசுப்பிரமணியன் T., (ஊர் எழுதவில்லை) 357. பலராமன் J., காவேரிப்பாக்கம். 358. பாபு B. M., சென்னை 14. 359. பாபு, V., புதுக்கோட்டை. 360. பாலன்

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

மே, 15-'54 கூபன் செ:

V. H., சிக்பம். 361 பாலசுப்பிரமணியன் C. M., சென்னை 4. 362. பாலசுப்பிரமணியன் K., சென்னை 4. 363. பஷீர் அஹமது A., திருச்சி. 364. பாலாம்பாள், S. V., திருவாரூர். 365. பாலசுப்பிரமணியன் (ஊர் எழுதவில்லை) 366. பிருந்தா, கணியூர். 367. பாலசுப்பிரமணியன் A., திருப்பனந்தாள், 368. பாலசுப்பிரமணியன் V., சென்னை 4. 369. பாலி P., பூதப்பாண்டி. 370. பாலகிருஷ்ணன் T., பண்ணுருட்டி. 371. பாலா M. S, கோயம்புத்தூர். 372. பாலசுப்பிரமணியன் B. V., திருச்சி. 373. பாலகிருஷ்ணன் K., புதுடில்லி. 374. பாலகிருஷ்ணன். மேட்டுப்பாளையம். 375. பாலசுப்பிரமணியன், A. P., அந்தியூர். 376. பாலசுப்பிரமணியன் A. A., அந்தியூர்.

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

377. பாலசுப்பிரமணியன் B. C. சென்னை 4. 378. பாகு S., திருப்பூர். 379. பாலேந்திரா T., கொக்குவில். 380. பாஸ்கரன் R., ஜாம்ஷட்பூர். 381. பூமிநாதன் R., தச்சநல்லூர்.

D. 152. துரைராஜ் P. V., தர்மபுரி. 153. தாமோதரன் S. S., சென்னை 1. 154. துவாரகநாத் P. R., பங்களூர். 155. துரைசாமி K.. முத்துகப்பட்டி. 156. தேவராஜன் K., பீளமேடு, 157. தண்டபாணி R., வேல்லூர், சேலம். 158. துரைசாமி S., சென்னை 17. 159. தசரதன், கும்பகோணம். 160, துரைசாமி R., விராலிமலை. 161. சேவசேனாதிபதி, சென்னை 14. 162. தர்மராஜு, நக்காஸதி. 163. துவாரகநாதன் K. P., கிணத்துக்கடவு. 164. துவாரதிருகோமஸ், குருநாகல். 165. துரைலிங்கம், R, ஜயலட்சுமி. S. திருபுரம், சென்னை 2. 166. திவான் முத்து முஹமது, சிவகங்கை. 167. தண்டபாணி V., பங்கஜவல்லி, கோயம்புத்தூர். 168 தேசிகாச்சாரி K.N., சேலம். 169. தனபால் P. நடராஜன். R., மருத்துவக்குடி. 170. தமயந்தி, பாளையங்கோட்டை. 171. துரைராஜ் V. R., புகளூர். 172. தாஸ் G. சாந்தாதேவி, கிருஷ்ணமூர்த்தி G. சாவகச்சேரி. 173. தேவராஜ் S., சண்முகநாதபுரம். 174. துரைசாமி N. A., புதுடெல்லி. 175. துரைராஜ் S.V., சென்னை 5. 176. தாஹுதபெக் P. K., ராமநாதபுரம். 177. தெய்வசிகாமணி G., ராபர்ட்ஸன் ரோட். 178. துரைசாமி R., காரமடை.

(தொடரும்)

பிள்ளையார் பிடி

மாருதி

சிவன் கோவிலில் அர்த்தஜாம மணியோசை கேட்டது. பூஜை இன்னும் ஆரம்பமாக வில்லை. அங்கே, கொஞ்சம் இருட்டான ஒதுக்குப் புறத்தில் ஓர் ஆசாமி மறைந்து நிற்கிறான். கோவிலில் இவனைத் தவிர அநேகமாகக் கூட்டமே இல்லை.

சிவபெருமான் தொண்டையைக் கனைத்து, "குழந்தாய்.. கணபதி!..." என்றார்.

பிள்ளையார், "ஏனப்பா!" என்றார் பதிலுக்கு.

"வாசலில் ஒரு பிச்சைக்காரன்-நம் பரம பக்தன்-ஒருவன் இருக்கிறானே, தெரியுமா?"

"தெரியும்."

"அவனுக்கு நாளை சூரியாஸ்தமனத்திற்குள், ஒரு லக்ஷ ரூபாய் பணம் கொடுத்துவிடு."

"சரி, அப்பா!"

இந்தப் பேச்சு, இருட்டில் ஒதுங்கி இருந்த ஆசாமி காதில் பட்டது. யார் அந்த ஆசாமி? அவன் ஏன் கோவிலுக்கு வந்தான்? அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டாமா? அவன்தான் அந்த ஊரில் வட்டிக் கடை வைத்து ஊரைக் கொள்ளையடித்து, கொழுத்துப் போன கிருபணசிகாமணி வட்டிக் கடை பைரவன். அவனிடம் கடன் வாங்கிக்கொண்டு, ஓர் ஆசாமி அவன் கண்ணில் படாமல் 'டிமிக்கி' கொடுத்து வருகிறான். அவன் தினம் இரவில் கோவிலுக்கு வருவது வழக்கம். அவனைப் பிடிக்கப் பைரவன் அங்கு வந்து சேர்ந்த போதுதான் இந்தப் பேச்சைக் கேட்க நேர்ந்தது.

பைரவனின் மூளை திடீரென்று வேலை செய்ய ஆரம்பித்தது. அந்தப் பிச்சைக்காரனை எப்படியாவது சரிப்படுத்தி அந்தப் பணத்தை அபேஸ் செய்துவிடத் தீர்மானித்தான். வந்த வேலையையும் மறந்துவிட்டுப் பிச்சைக்காரனிடம் போய் 'நைஸாக'ப் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான்.

''அப்பா, உனக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு வரும்படி வரும்?'' என்று கேட்டான்.

அதற்கு அந்தப் பிச்சைக்காரன், ''அவன் ஏதோ என் வயிற்றுக்குப் போதுமான அளவுக்குக் குறைவில்லாமல் கடவுள் படி அளக்கிறான்'' என்றான்.

பைரவன், ''நான் சொல்கிறபடி கேட்டால் நீ பிச்சை எடுக்க வேண்டிய அவசியமே இல்லை - நாளை மாத்திரம் நீ பிச்சை எடுத்து வரும் பணத்தை என்னிடம் கொடுத்துவிடு. உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமோ, என்னைக் கேள், தருகிறேன்'' என்றான்.

''எனக்கு என்னாங்க...அவ்வளவு நிறைய வரப்போவுது?.... இன்னிக்கெல்லாம் ஆறணா - பத்தணா கிடைச்சா அதுவே கூட. அது உங்களுக்கு என்னாத்துக்குங்க?....!'' என்றான்.

''இல்லேப்பா - எவ்வளவு வந்தாலும் எனக்குக் கொடுத்துடு.. உனக்கு ஆயிரம் இல்லை,.... பத்தாயிரம் ரூபாய் தருகிறேன்'' என்றான் பைரவன்.

''வேணாமுங்க - 'அவன்' அளக்கிறபடியே எனக்குப் போதும்.''

இப்படியாகப் பேரம் உயர்ந்து கொண்டே போய், பைரவன் பிச்சைக்காரனுக்கு ரூபாய் இருபத்தி ஐயாயிரம் கொடுப்பது என்றும் பதிலுக்கு அவன் மறுநாள் தனக்குக் கிடைக்கும் பணத்தைப் பைரவனுக்குக் கொடுப்பது என்றும் முடிவாயிற்று.

மறு நாள் அதிகாலை, பைரவன் ரூபாய் இருபத்தி ஐயாயிரத்தைக் கொண்டு வந்து பிச்சைக்காரனிடம் கொடுத்துவிட்டு அவன் உட்காரும் இடத்திற்கு எதிர்ப்புறத்தில் உள்ள மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டான். சாயங்காலம் ஆக ஆக, பைரவனின் ஆவல் அதிகமாகிக் கொண்டே வந்தது. கொஞ்சம் கனமான ஆசாமிகள் அந்தப் பக்கம் வந்தால் கூட, ''ஒருவேளை பிள்ளையாரோ?'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டு பார்க்க ஆரம்பித்தான். மணி ஆறு - ஆறரை! ஏழு கூட ஆகிவிட்டது. ஒருவரும் பிச்சைக்காரனுக்குக் காலணாப் போடவில்லை. பைரவனுக்குப் பெருத்த ஏமாற்றம், ஆத்திரம், கோபம் வந்து

விட்டது. விறுவிறென்று கோவிலுக்குள் போனான். நேரே பிள்ளையார் அருகில் போய், வலது கையால், அவருடைய துதிக்கையைப் பிடித்துக் கொண்டு, "ஓய்! பிள்ளையாரே, இதுதானா உமது யோக்கிதை? கடவுளே இந்த மாதிரி வார்த்தை தப்பி நடந்தால், உலகம் என்னாவது?" என்றான்.

இடையே, சிவபெருமானின் குரல், "அப்பா! கணபதி!" என்றது.

பிள்ளையார், "ஏனப்பா!" என்றார்.

"பிச்சைக்காரனுக்கு லக்ஷ ரூபாய் கொடுத்து விட்டாயா?"

"இல்லை அப்பா.. இருபத்தி ஐயாயிரம்தான் கொடுத்திருக்கிறேன்.. இன்னும் பாக்கிக்குப் பேரம் நடக்கிறது!"

அதற்குள் பைரவன், "ஐயோ! இதென்ன அயோக்கியத்தனம்... பணம் கொடுத்தது நானல்லவா? நீர் எங்கேயிருந்து ஐயா கொடுத்தீர்?" என்றான்.

அதற்குப் பிள்ளையார், "பைரவா! நாங்கள் என்ன, ஊரில் உள்ளவர்கள் பணம் கேட்கும் போதெல்லாம் கொடுக்க 'பாங்க்'ரா? - உன் மாதிரி கொள்ளையடிக்கிறவா கிட்ட இருக்கிற பணத்தை 'லேசா' அவசியமான பேருக்கு மாற்றி விடுவதுதான் எங்க வேலை. மரியாதையா, இன்னும் எழுபத்தி ஐயாயிரத்தை வரவழைத்துப் பிச்சைக்காரனிடம் சேர்த்தாயோ பிழைத்தாய்! இல்லாவிட்டால் கையை வெளியே எடுக்க வராது...ஆமாம்" என்றார் கண்டிப்பாக.

பைரவன் எவ்வளவோ முக்கி முயன்று பார்த்தும் கை வெளியே வரவில்லை. மரியாதையாகப் பிச்சைக்காரனை விட்டே வீட்டிற்குச் சொல்லி அனுப்பித்தான். அவர்கள் வந்து குறிப்பிட்ட தொகையைப் பிச்சைக்காரனிடம் சேர்த்த பிரகு தான் பைரவன் கை வெளியே வந்தது.

நீங்கள் இன்றுகூட அந்த ஊருக்குப் போனால், பிள்ளையார் கோயில் 'ஜாம், ஜாம்' என்று திருப்பணி செய்யப்பட்டு 'ஜில்'லென்று இருப்பதைப் பார்க்கலாம். அதெல்லாம், பைரவனின் உபயமாகும். இப்போதெல்லாம் பைரவன் பக்தியில், அந்தப் பிச்சைக்காரனைக் கூட மிஞ்சிவிட்டான்!

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

[நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் விடை சொல்லவேண்டும் என்பதே பேராசிரியர் விஞ்ஞானத்தின் கருத்து. உங்களை வெறுமே சிரிக்கச் செய்ய வேண்டும் என்று விடை சொன்னால், அது பயனுள்ளதாக இராது. உங்களுக்குப் பயன்படவும் வேண்டும்; உங்களைத் திருப்தி செய்யவும் வேண்டும் என்பதே விஞ்ஞானத்தின் நோக்கம். ஆ—ர்.]

K. V. ராமகிருஷ்ணன்,
சீகாழி. வயது 13.

கடல் ஆழத்தை இந்தக் காலத்தில் எப்படி அளக்கிறார்கள்?

எதிரொலி தரை மட்டத்துக்குப் போய்த் திரும்பிவரும் நேரத்தைக் கணக்கிடும் நூதனக் கருவியைக்கொண்டே அளக்கிறார்கள்.

N. வைத்திநாதன்,
கடலூர், N. T. வயது 15.

மனிதருள் ஆண், பெண் இருபாலாரின் உடம்பிலும் எலும்புகள் அளவில் சமமாக இருக்குமா? அல்லது குறைவும் அதிகமுமாக இருக்குமா?

சமமாகவே இருக்கும்.

ராஜசேகரன்,
சென்னை-1. வயது 14.

நம் கைக் கடிகாரம் ஒரு வருஷத்தில் எவ்வளவு முறை 'டிக், டிக்' என்று அடிக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா?

நம் கைக் கடிகாரம் ஒரு வருஷத்தில் சுமார் 15 கோடியே 80 லட்சம் தடவை 'டிக், டிக்' என்று அடிக்கிறது.

யமுனா, பழைய அகரம்.
வயது 13.

நம் தபால்-தந்தி இலாகா எத்தனை விதமான பாஷைகளில் தபால்களைக் கையாள்கிறது? தினமும் எவ்வளவு தபால்கள் பட்டுவாடாச் செய்யப்படுகின்றன?

நம் தபால் இலாகா 35 பாஷைத் தபால்களைக் கையாள்கிறது. தினமும் 70 லட்சம் தபால்கள் பட்டுவாடாச் செய்யப்படுகின்றனவாம்.

தா. பொ. ஆல்பிரட், முசாபானி சுரங்கம், சிங்பம், வயது 11.

உலகத்திலுள்ள அதிசயங்கள் எத்தனை? அவை யாவை?

இக்காலத்திலே ஒவ்வொரு துறையிலும் விந்தைச் செயல்கள் நிகழ்த்தப் படுகின்றன; விந்தைப் பொருள்கள் இயற்றப்படுகின்றன. ஆகையால், உண்மையாக, இவ்வுலகத்திலுள்ள அதிசயங்களைக் கணக்கிடவே முடியாது என்று சொல்லவேண்டும். நாமே ஒரு விந்தைதான்.

பழங்காலத்திலே ஏழு செயற்கை விந்தைகளை மிகவும் சிறப்பாக மதித்துவந்தார்கள். அவையாவன: 1. பாபிலோன் நகரத்துத் தொங்கு தோட்டம்; 2. பைடியஸ் செய்த ஸியுஸ் விக்கிரகம்; 3. ஆர்டிமிஸ் தெய்வத்தின் திருக்கோயில்; 4. மாஸோலஸ்ஸின் சமாதி; 5. ரோட்ஸிலுள்ள சூரிய விக்கிரகம்;

6. பாரோஸ் தீவின் கலங்கரை விளக்கம்; 7. எகிப்து நாட்டுப் பிரமிட்டுகள்.

அன்னபூரணி, வடக்கு மாசி வீதி, மதுரை. வயது 13.

'கெட்டிலில் நீர் கொதிக்கும் போது அது நீராவியாகிறது; நீராவி கண்ணுக்குத் தெரியாது' என்கிறார்களே. கெட்டிலின் மூக்கு வழியாக வரும் நீராவி வெள்ளையாகப் புகைபோல் தெரிகிறதே, எப்படி?

நீ முதலில் சொன்னது சரி. ஆனால், நீராவி புகைபோல் கண்ணுக்குத் தெரிகிறது என்றது சரி இல்லை. வெள்ளைப் புகையைப் போல் தோன்றுவது நீராவி இல்லை.

கெட்டிலின் மூக்கு வழியாக நீராவி வெளியே வந்ததும், அதை விடக் குளிர்ந்த வாயுமண்டலத்தில் அது படுகிறது. பட்டதும், அதில் ஒரு பகுதி சற்றே குளிர்ந்து மிக மிக மெல்லிய நீர்த்திவலைகளாக மாறுகிறது. இந்தத் திவலைகளின் தொகுதிதான் வெள்ளைப் புகைப்போல் தோன்றுகிறது. ஆகாயத்தில் மிதக்கும் வெண்ணிறமான மேகங்களும் இப்படிப்பட்ட நுண்ணிய நீர்த்திவலைகளால் அமைந்தவை.

பா. நாராயணன், பருத்தித்துறை, இலங்கை.

ரெயில்வே ஸ்டேஷனில் ரெயில் வந்தவுடன், எஞ்ஜினில் இருப்பவர் ஒருவர் சாவி (TABLET) கொடுக்கிறாரே, அது எதற்காக?

ஒரே தண்டவாளத்தில் பல ரெயில்கள் ஓடவேண்டி யிருக்கின்றன. சில ஒரே திசையாகச் செல்லும்; சில எதிர்த் திசையாகச் செல்லும்.

ஒரு ஸ்டேஷனிலிருந்து ரெயில் புறப்பட்டு விட்டது என்ற செய்தி மறு ஸ்டேஷனுக்குத் தெரிவிக்கப் படும். அந்த ரெயில் மறுஸ்டேஷனை அடைந்துவிட்டது என்ற செய்தி மறுஸ்டேஷனிலிருந்து கிடைத்தால்தான் அவ்விரண்டு ஸ்டேஷன்களுக்கும் இடையே உள்ள தண்டவாளத்தில் வேறொரு ரெயிலை ஓடவிடுவார்கள். இல்லையானால் எதிர்ப்புறமிருந்து வரும் மற்றொரு ரெயிலுடன் மோதி அபாயம் நேரிட்டுவிடும்.

அப்படிச் செய்தி கிடைத்துவிட்டது என்பதற்கு அடையாளமே நீ சொல்லும் 'சாவி'. ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஓர் எந்திரத்தில் சாவியைச் செருகி யிருக்கும். அந்த ஸ்டேஷனுக்கும் அடுத்த ஸ்டேஷனுக்கும் இடையே ரெயில் இருக்கும்போது அந்தச் சாவியை எந்திரத்திலிருந்து உருவ முடியாது. ரெயில் இல்லை என்ற செய்தி கிடைத்தபின்தான் அந்தச் சாவியை எந்திரத்திலிருந்து எடுக்க முடியும். எடுத்த சாவியைப் பெற்றுக்கொண்ட பிறகே எஞ்ஜினை ஓட்டுபவன் அந்த ஸ்டேஷனை விட்டுப் புறப்படலாம். ஒரு ஸ்டேஷனுக்கும் மறு ஸ்டேஷனுக்கும் இடையேயுள்ள தண்டவாளத்தில் வேறொரு ரெயிலும் ஓடவில்லை; ஆகையால், அடுத்த ஸ்டேஷனுக்குப் போகலாம் என்னும் அநுமதிச் சீட்டே அந்தச் சாவி.

வி. தயாநிதி, தெற்கு அலங்கம், தஞ்சாவூர். வயது 14.

நிலவு நாட்களில் கடல் பொங்குவதேன்?

கடல் நிலாக்காலங்களில் மட்டும் தான் பொங்குகிறது என்பது சரியல்ல. அது தினந்தோறும் இரண்டுமுறை பொங்குகிறது. இதை ஏற்றம் என்று சொல்லுகிறார்கள். ஏறிய கடல் தினந்தோறும் இரண்டு முறை வடிகிறது. இதை வற்றம் என்று சொல்லுகிறார்கள். இரண்டையும் சேர்த்துக் கடலின் ஏற்ற வற்றம் (Tides) என்கிறார்கள்.

கடலின் ஏற்றவற்றத்துக்குச் சூரியனும் சந்திரனுமே காரணம். அவை இரண்டும் பூமியைக் கவர்கின்றன, இழுக்கின்றன. அப்படி இழுக்கும்போது நிலமும் நீரும் இழுக்கப்படுகின்றன. ஆனால், நிலம் கட்டியாக இருக்கிறது; நீர் நெகிழ்ச்சியாக இருக்கிறது. ஆகையால், நிலத்தைவிட நீர் அதிகம் இழுக்கப்படுகிறது; உயர்கிறது; பொங்குகிறது.

அமாவாசை அன்று சூரியனும் சந்திரனும் ஒரே பக்கத்திலிருந்து கடலின் நீரை இழுக்கின்றன. ஆகையால், அன்று கடல் அதிகமாகப் பொங்கும். பௌர்ணமியன்று சூரியன் ஒரு புறமும், சந்திரன் அதற்கு எதிர்ப் புறமுமாய் இருந்துகொண்டு—ஆளுக்கு ஒரு பக்கமாகக் கடலின் நீரை இழுக்கின்றன. அன்றும் கடலின் நீர் அதிகமாகப் பொங்கும். இந்த இரண்டையும் உவா ஏற்றம் (Spring Tide) என்று சொல்லுகிறார்கள்.

அமாவாசையிலிருந்து எட்டாம் நாளிலும், பௌர்ணமியிலிருந்து எட்டாம் நாளிலும் சந்திரன் ஒரு பக்கமாகவும், சூரியன் அதற்கு நேர் குறுக்காகவும் கடலின் நீரை இழுக்கும். ஆகையால் அப்போது ஏற்றம்—அதாவது பொங்குதல்—மட்டாக இருக்கும். இதை இடையுவா ஏற்றம் (Neap Tide) என்று சொல்லுகிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள பண்டி விரிகுடாவில் (Bay of Fundy) கடல் சுமார் எழுபது அடி உயரம் பொங்குகிறது. பிரிஸ்டல் கால்வாயில் (Bristol Channel) சுமார் ஐம்பது அடி உயரம் பொங்குகிறது.

எஸ். சோமசுந்தரம்,
கோவிலூர். வயது 12.

சில தீக்குச்சிகளைக் கீச்சினால் பற்றுவதில்லை. தீப்பெட்டியின் பக்கத்தில் கீச்சினால்தான் அவை பற்றுகின்றன. ஏன்?

சாதாரணத் தீக்குச்சியில் தீயைப் பற்றச் செய்யும் பொருளும், அதற்குத் துணைசெய்யும் ஆக்ஸிஜனைத் தரும் பொருளும் ஒரே இடத்தில்—அதாவது தீக்குச்சி தலையில்—வைக்கப்பட்டிருக்கின்றன. தீயைப் பற்றச் செய்யும் பொருள் சிவப்புப் பாஸ்வரம்; ஆக்ஸிஜனைத் தரும் பொருள் பொட்டாஸியம் குளோரேட்டு, அல்லது நைட்டிரேட்டு.

காப்புத் தீக்குச்சிகளில் பொட்டாஸியம் குளோரேட்டு போன்ற பொருள்கள் தீக்குச்சியின் தலையில் வைத்திருக்கும், சிவப்பு பாஸ்வரம், ஆண்டிமனி ஸல்பைடு போன்ற பொருள்கள் தீப்பெட்டியின் பக்கத்தில் பூசப்பட்டிருக்கும். ஆகையால், தீக்குச்சியைத் தீப்பெட்டியின் பக்கத்தில் தேய்த்தால்தான் தீப்பற்றும். இல்லாவிட்டால் தீப்பற்றாது.

கதை: ஆர்வி

தூங்கும் அழகி

ஓவியர்: ஸாமி

பதினைந்து நாள் சென்றதும்.......
அப்பா ராஜன்! நீ அந்தக் குழந்தையை மறந்து விடுவதே நல்ல தென்று தோன்று கிறது!
இதற்கு ஒருவழி இல்லையா?
எவ்வளவோ தவமிருந்து தங்கள் அருளால் அந்தக் குழந்தை பிறந்தது. அதை இழந்து நாங்கள் உயிர் வாழ்வதா?
அந்தக் குழந்தை வடக்கே நூறு யோசனைக் கப்பால் ஜின் என்ற தேவதையிடம் இருக்கி றது. அதனிடமிருந்து குழந்தை யை மீட்பது என்பது லேசி ல்லை. நீங்கள் போனால் இங்கே ராஜ்யமே பறி போய் விடும்.
ஆமாம், உனக்கு ராஜ்யம் வேண்டுமா, குழந்தை வேண்டுமா? இதுவே கேள்வி!
பறி போய் விடுமா?
எனக்கு குழந்தை தான் வேண்டும்!
எனக்கும் குழந்தை தான் வேண்டும். ஆனால் ராஜ்யம்.....
ஹஹ்ஹஹ்ஹா!! அதை நன்றாக யோசித்து நாளை காலை முடிவு சொல்!
சித்தம்!
அன்று இரவு........
மந்திரி! இந்தச் சங்கடத்துக்கு நாம் என்ன செய்வது?
அது தான் யோசிக் கிறேன். ஒன்றும் எனக்குப் புரியவில்லை.
குழந்தை இல்லாத ராஜ்யம் நமக்கு எதற்கு?
குழந்தைக்கு ராஜ்யம் இல்லாமல் போய்விடக் கூடாதே!
மறுநாள் காலை........
என்ன முடிவு செய்தாயா?
தாங்கள் தான் ஒரு யோசனை சொல்ல வேண்டும். எனக்கு ஒன்றும் புரியவில்லை.
தொடரும்.

எங்கள் பகுதி

*** ஆயிரம் பொய் சொல்லி..**

புது ஆண்டின் முதல் இதழ் வழக்கத்தைவிடக் கூடச் சிறப்பாகவே இருக்கிறது! ஆனால்..

பாலகுமார் கதை முடிந்துவிட்டதற்காகத் தீப்பொறி 'பறக்கும் கடிதங்கள்' தங்களுக்கு வந்திராது என்றே நான் எண்ணுகிறேன். கடிதங்களில் தீப்பொறி பறந்தால் அவை என்ன ஆகும்? சந்திரகிரிக் கோட்டைக் கதையில், 'பாளையக்காரர் கண் கொட்டாதபடி பார்த்துக் கொண்டிருந்தார்' என்று வருகிறது. கண் கொட்டாதபடி இருப்பது சாத்தியமா?

வீண் பெருமை என்ற கதையில் பொன்னுசாமிக்கு, 'மூச்சு விடக்கூட நேரம் இருக்காதாமே!' மூச்சு விடாவிட்டால், அப்புறம் ஆளே ஏது, ஐயா? 'பால் வடியும் முகம்' என்று அவன் வர்ணிக்கிறான். உண்மையில் அப்படி இருந்தால், பார்க்கிறதற்கு எவ்வளவு அருவருப்பாக இருக்கும்!

தங்கச் சிறகுக் கதையில், தம்பியின் 'தலை மறைந்ததும்' அண்ணன் அந்தப் பிள்ளைகளிடம் கறிசமைக்க உத்தரவிடுகிறான். உண்மையில் தம்பியின் தலை மட்டும் மறைந்த பின்னரா அப்படிச் செய்தான்? ஆளே தூரத்தில் மறைந்த பின்பு தான் செய்திருப்பான்.

பெருமைக்காரர் கதையில் வரும் கார்டு கருணாநிதி, கலாட்டாக்காரர்களை 'ஒரே வார்த்தையில் ஓடும்படி செய்துவிட்டேன்' என்கிறார் பெருமையாக. ஆனால் வாஸ்தவத்தில் அவர் பத்துப் பதினைந்து வார்த்தைகளைச் சொல்லியிருந்தும் வாய்கூசாமல் ஒரே வார்த்தை என்கிறாரே மனுஷன்!

ஏமாந்தது யார் என்ற கதையில் கடைசியில், ஒருவரைத் 'தூக்கிவாரிப் போட்டதாமே!' நீங்கள் கவனித்தீர்களா? ரெயிலில் இருந்து தூக்கி வாரிப் போட்டால், பேர்வழி தண்டவாளத்தில் விழுந்தாரா, பிளாட்பாரத்தில் விழுந்தாரா? 'உயிர் மீண்ட முயல்குட்டி உடனே நீட்டியது கம்பி'—இது மகா யோக்கியன் கதையில்! காட்டிலே ஓடும் முயலுக்குக் கம்பி எங்கே சார், கிடைத்தது? அது என்ன, இரும்புக் கம்பியா, தங்கக் கம்பியா, வெள்ளிக் கம்பியா?

---

* பரிசு பெற்ற கடிதம்.

ஐயாசாமியின் முகத்தில் 'எள்ளும் கொள்ளுமாக' வெடித்த தாம், கிச்சுவை 'ஊர் முழுவதும் சல்லடை போட்டுத் தேடினர்க ளாம்', 'விழுந்து விழுந்து அழாமல் சிரித்தார்களாம்!' கூட்டத் தினரின் 'ஜே' கோஷம் 'வானைப் பிளந்ததாம்!' அத்தனையும் வெறும் கப்ஸா!

ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை முடிப்பதாகச் சொல்லுவதுண்டு; இவர்களானால் ஆயிரம் பொய் எழுதி ஒரு கதையை முடிப்பார்கள் போல் தெரிகிறதே!

[பின் குறிப்பு:—உங்கள் காதோடு ஒரு வார்த்தை: அப்பா வின் 'தலை அந்தண்டை மறைந் ததோ' இல்லையோ, நான் பாட புத்தகத்தைப் போட்டுவிட்டுக் கண்ணனை எடுத்துக் கொள்வேன். அவ்வளவுதான்! 'கண்கொட்டாத படி' படிக்கும் சுவாரஸ்யத்தில் ஆழ்ந்துவிட்டால் அப்புறம் 'மூச்சு விடக்கூட' எனக்கு நேரம் இருக்காது! கண்ணனில் வரும் கதைகள்போல் எப்படியும் எழுத வேண்டுமென்று மண்டையைப் போட்டு உடைத்துக்கொள்வேன்; முடியாது. அது சமயம் தம்பியோ தங்கையோ இடைஞ்சல் செய் தால் 'கண்களில் தீப்பொறி பறக்க' அவர்களைக் கூச்சல் போட்டு விரட்டுவேன். பாவம்! அவர் களுடைய 'பால்வடியும் முகங்கள்' வாடி வதங்க அப்பால் போய்விடு வார்கள். திடீரென்று வாசற்புறம் அப்பாவின் உருவம் தெரியவே எனக்குத் 'தூக்கி வாரி'ப் போடும்! கண்ணனை எடுத்துச் சட்டைக்குள் மறைத்துக்கொண்டு புழக்கடை வழியாக வெளியே 'ஓட்டுவேன் தம்பி!']

—பெ. கலாசாமி, 93, G.C. ரோடு, தூத்துக்குடி.

தமிழ் ஊற்று

15-4-54ந்தேதி கண்ணன் அட்டைப்படம் திகட்டாத விருந் தளிக்கிறது.

கேட்டீர்களா!- பல தெரியாத (கேள்விப்படாத) விஷயங்களை அறியவைக்கிறது. 'சந்திரகிரிக் கோட்டை' குறையாத புகழோடு என்றும் விளங்கும்படியாக அழகிய தமிழ் நடையிலே எங்கள் மனத்தைக் கவருகிறது.

'பெருமைக்காரர்' சுமாரான கதை. 'வீண் பெருமை' ஓர் உண்மையை வைத்துக்கொண்டு பதினாயிரம் பொய் சொல்லுவ தாகும்.

'புனைபெயர்' விறு விறுப்பான கதை. கதை எழுதும் அண்ணனுக் குத் தங்கை சொல்லும் தந்திரம் மிகஜோர்! பர்மியக்கதையின் மொழிபெயர்ப்பான 'தங்கச் சிறகு' கருத்து மிக்க கதை. நம்பிய வனுக்கு நாசம் செய்பவர்கள் உருப்பட மாட்டார்கள்தான்! 'ஏமாந்தது யார்' நன்றாக இல்லை.

'மகாயோக்கியன்' மிகவும் நன் றாக இருக்கிறது. வலுத்தவனுக்கு இளைத்தவன் அடிபணிந்து போக வேண்டியதுதானே!

இந்தச் செந்தமிழ் இதழிலே இரு உலகறிந்த உண்மையை எடுத்தாண்டிருக்கிறார்கள் எஸ். கணேசனும், தங்கமணியும். அதா வது முறையே, "எழுத்தாளர்கள் எல்லாம் தாங்கள் முன்னேறத் தான் பார்ப்பார்கள். பிறரை கைதூக்கிவிட மாட்டார்கள்!"

என்பது. "படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில்" என்பது மற்றொன்று.

அசட்டுப் பிச்சு பிரிவது ஒன்று தான் துக்ககரமான விஷயம். ஆற்று மணலில் ஒருவன் சிறு ஊற்றுத் தோண்டினாலும் கூட அது நமக்கு விரைவில் அதிகப் பலனை அளிக்கும்.

கண்ணன் ஒரு வற்றாத ஊற்றுத் தான், தமிழ் ஊற்று!

-அ. ரவுலா அம்மாள், மன்னார்குடி.

மதி வளர்க்கும் கண்ணன்

15-4-54 கண்ணனின் முகப்பு அட்டையைப் பார்த்தால் ஒரு சிறு கதை எழுதிவிடலாம் என்ற எண்ணம் தோன்றுகிறது.

தங்கமணி எழுதிய 'மகா யோக்கியன்!' என்ற கதை சிந்திக்கும் தன்மையுடைய சிறுவர்களுக்கு அருமையான விருந்து. எழுத்து நடை ரசிக்கத் தக்கது.

'பெருமைக்காரர்' என்ற கதை திமிரோடு பெருமை பேசுபவருக்குச் சரியான சூடு தருகிறது.

'புனை பெயர்' நாடகத்தை இன்னும் சிறிது வளர்த்திருக்கலாம். 'வீண் பெருமை'ப் பொன்னுசாமியைப் போன்று பாடசாலையிலேயே எத்தனையோ மாணவ மாணவிகளைக் காண்கிறோம். 'தங்கச்சிறகு' என்ற கதையின் அடிப்படைக் கருத்து எனக்குப் பிடிக்கவேயில்லை!

விடை பெற்றுச் சென்ற 'அசட்டு பிச்சு'விற்கு நல்லாசி! 'தூங்கும் அழகி'யை 'வருக' என்று தமிழ் மரபை ஒட்டி அழைக்கிறேன். 'கேளுங்கள் சொல்லுகிறேன்!' நல்ல பகுதி.

—சு. தமிழ்வாணன், சிங்கப்பூர் 8.

அபாரம்

15-4-54 இதழின் அட்டைப் படம் அபாரம். 'வீண் பெருமை' என்னும் கதை மூலம் ஆசிரியர் நல்ல புகழையும் பெருமையையும் சம்பாதிக்கிறார்.

தற்காலத்தில் பிறருக்குப் புரியும்படி கதை எழுதினால் அதை ரஸிப்பவர்கள் இல்லை. ஆனால் அடுக்கு மொழியில் விளாசி, அர்த்தமற்ற வாக்கியங்களைப் புகுத்தி, அபத்தமான கருத்துக்களை அதனுள் நுழைத்து மூளையைக் குழப்பிக்கொள்ளும்படியான கதைகளைத்தான் விரும்புகிறார்கள். இதை எஸ். கணேசன் அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறார். நடையும் பிரமாதம்.

"ஏமாந்தது யார்?" என்னும் கதை அவ்வளவு உயர்ந்ததாக இல்லை. அதை எழுதினவர்தான் ஏமாந்தார். 'மகாயோக்கியன்' மகாப் பிரமாதம்! 'அசட்டுப் பிச்சு' வெகு ஜோர்.

—P.C. வரதாச்சாரி, சென்னை 5.

அழகுக் கண்ணன்

15-4-54 கண்ணன் இதழைக் கையில் வாங்கியவுடன் 'சந்திர கிரிக் கோட்டை'யை முன்னால் அடைவதா அல்லது 'அசட்டுப் பிச்சுவை'ப் பார்ப்பதா என்றே சிறிது நேரம் சிந்தனையில் இறங்கி விட்டேன்.

பிறகு பிச்சுவுக்குப் பிரியா விடை கொடுத்துவிட்டு, 'சந்திரகிரிக் கோட்டை'யைப் படித்தேன். இரு சமர்த்துச் சிங்கங்களும் ஜயித்து என் ஆவலை இன்னும் தூண்டிவிடுகிறார்கள்.

'வீண் பெருமை'யில் வரும் பொன்னுசாமி நம்மிடையே உல

வும் பலருக்கு ஓர் பிரதிநிதியாக நிற்கிறான், 'புனை பெயர்' ஓர் அருமையான நாடகம். கதை முழுவதும் ஹாஸ்ய உணர்ச்சி பெருக்கெடுத்தோடுகிறது.

'தங்கச் சிறகு' என்று அணுகிய என்னை அது நன்றாய் ஏமாற்றி விட்டது. 'பெருமைக்காரர்'ரின் சரிதம் ஏற்கக்கூடியதாய் இல்லை. 'ஏமாந்தது யார்' என்ற கதையின் முடிவு இன்னும் கொஞ்சம் தெளிவாய் இருக்கவேண்டும்.

இந்த இதழிலே மிகச் சோபையுடன் விளங்குபவனவற்றில் 'மகா யோக்கியன்' முதலிடம் பெறுகிறார். 'கேளுங்கள் சொல்கிறேன்' என்ற பகுதியை ஆரம்பித்தது எங்கள் அழகுக் கண்ணனுக்குப் புது அணி ஒன்று பூட்டியது போல் உள்ளது.

அட்டைப் படம் வெகு அழகு. பூஜ்யம் வாங்கிய தம்பியின் அப்பாவிடம் போய், "தம்பியை அடிக்காதீர்கள்! இனிமே நல்லாப் படிப்பான்!" என்று சொல்லப் போகிறேன். —வெ. சரஸ்வதி, சீகாழி.

வெற்றி விழா

15-4-54 கண்ணன் அட்டைப் படம் விழிகட்கு விருந்தளித்தது.

'கேட்டீர்களா' என்ற பகுதியில் உலகை அழிக்கும் ஜலவாயுகுண்டு என்றதுமே உலகிலுள்ள அனைவருக்குமே திகில் உண்டாகியிருக்கலாம். 'சந்திரகிரிக் கோட்டை'க்கு ஒரு சபாஷ்! வீண் பெருமை பேசி டம்பம் அடிக்கும் பெரியசாமி போன்றவர்கள் குணத்தை மாற்ற முடியாது!

'புனை பெயர்' என்ற கதையில் புனை பெயரில் வந்த விளைப்பயன் அப்பொழுதுதான் தெரிகிறது! 'பெருமைக்காரர்' நல்ல கதை. 'மகா யோக்கியன்' அருமையான கருத்து!

'கேளுங்கள்' என்ற பகுதி நிரம்பவும் திருப்தி அளித்தது. அசட்டுப் பிச்சுவுக்கு வெள்ளி விழா, பொன் விழா, வைர விழா ஆகிய மூன்று விழாக்களையும் ஒன்று சேர்த்து வெற்றி விழாவாக வருகின்ற வெள்ளிக் கிழமை $11\frac{1}{2}$ மணிக்கு நமது அறிஞர் 'கண்ணன்' தலைமையில் எமது இல்லத்தில் நடத்தவிருக்கிறோம்! வர முடியாவிட்டால் வாழ்த்தாவது அனுப்புங்கள்!

—மு. மாரப்ப பூபதி, பவானி.

பாராட்டுக்குரிய கடிதங்கள் எழுதியவர்கள்:

(1) கமலக்கண்ணன், சென்னை-3 (2) சிவராமகிருஷ்ணன், மன்னார்குடி. (3) ஏ சுப்பராயன், தூத்துக்குடி. (4) ஆர். கருணேஸ்வரி, பருத்தித்துறை. (5) நா. வைத்திநாதன், தலையூர். (6) ஐராங்கனைதேவி, கண்டி. (7) அன்பழகன், பணகுடி. (8) ஏ. ராஜலக்ஷ்மி, செட்டிகுளம். (9) ஆர். இந்திரா, கல்கத்தா-19. (10) எஸ். ஏ. ஜப்பார், அதிராம்பட்டணம். (11) என். பாலசுப்பிரமணியன், கொழும்பு. (12) அஸீஸுல்லா ஷரீப், சென்னை-2. (13) ஆர். சந்தானம், திருத்தருப்பூண்டி. (14) கே. சீனு, புது டில்லி. (15) முத்து சேதுபதி, முத்தாயிப்பாளையம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

குகை-சேலம் { தலைவர்: S. S. சீனிவாசன்.
உப தலைவர்: V. D. சோமசுந்தரம்.
காரியதரிசி: R. கந்தசாமி. }

எட்டுப் பேர்கொண்ட ஒரு செயற்குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 'தென்றல்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் நடைபெறுகிறது.

சிறுகதைப் போட்டி

பணகுடி கண்ணன் கழகத்தில் சிறுகதைப் போட்டி ஒன்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதில் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். பெயர், ஊர், கண்ணன் கழக எண், விலாசம். முதலியவற்றைத் தெளிவாக எழுதி, கதையை 20-6-54க்குள் அனுப்ப வேண்டும். கதையுடன் இரண்டு அணைத் தபால் தலையும் அனுப்ப வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் கதைகளுக்குத் தகுந்த சன்மானம் அளிக்கப்படும். கதைகள் அனுப்ப வேண்டிய விலாசம்: தெ. தமிழ்க்குமரன், தமிழரசி இல்லம், பணகுடி. P. O. (திருநெல்வேலி.)

பங்களூரில்: கண்ணன் கிளைக் கழகம் ஸ்தாபிக்க R. துவாரகாநாத். H-93-பாலபெட்-என்ற விலாசத்தில் அங்கத்தினர்கள் சந்திக்கலாம்.

* * *

பேனு நண்பர்கள்

1. பர்வதவர்த்தினி, 6, கரூர் கிருஷ்ணசாமி நாயுடு தெரு, வேலூர். (வ. ஆ.)

2. D. அப்பாசாமி, 44 கஸ்தமேட்டு வீதி, வேலூர். (வ. ஆ.)

3. என். புருஷோத்தமன், 15-சாலைத் தெரு, வேப்பேரி, சென்னை 7.

4. G. V. கமலேசன், c/o அங்கமுத்து விலாஸ், பெரியநாயக்கன்பாளையம், S. R. K வித்யாலயம் போஸ்ட் (கோவை).

5. D. ரணதீர் சிங், பெருமாள்கோயில் வீதி, S. R. K. வித்யாலயம் போஸ்டு. பெரியநாயக்கன்பாளையம், (கோவை).

6. M. அங்கமுத்து, அங்கமுத்து விலாஸ், பெரியநாயக்கன்பாளையம், S. R. K. வித்யாலயம் போஸ்டு. (கோவை).

7. S. G. கிருஷ்ணன், கூகளூர்-P. O., (வயா) கோபிசெட்டிப்பாளையம்.

8. S. சீனிவாசன், 11/1, சூளைமேடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை, 24.

Reg. No. M. 5542

டைம் பீஸ் பரிசு!

வலது பக்கத்திலுள்ள படத்தைப் பாருங்கள். ஒரு ராஜகுமாரி, ஒரு மந்திரவாதி, ஒரு தாதி, ஒரு ராஜகுமாரன் ஆகிய நால்வர் காணப்படுகிறார்கள். நடுவில் அழகான குதிரை ஒன்றும் நிற்கிறது. இவர்களை வைத்துக்கொண்டு அற்புதமான கதை ஒன்று எழுதவேண்டும். உங்கள் கதையில் இன்னும் சிலபேர் கூட வரலாம். ஆனால் முக்கியமாகப் படத்திலுள்ளவர்களும் வர வேண்டும்.

முதல் பரிசு பெறும் கதைக்குத்தான் டைம் பீஸ்! இரண்டாவது மூன்றாவது பரிசு பெறும் கதைகளுக்கு உசிதமான சம்மானம் உண்டு. பரிசு பெறாத சில நல்ல கதைகளும் பிரசுரத்துக்கு வரலாம்.

நிபந்தனைகள் :

1. இதில் 7 வயதுக்குமேல் 16 வயதுக்கு உட்பட்டவர்கள்தான் கலந்துகொள்ளலாம்.
2. ஒருவர் இரண்டு கதைகளுக்கு மேல் எழுதியனுப்பக் கூடாது.
3. கண்ணன் கழகத்து அங்கத்தினர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம். புதிதாகச் சேருபவர்கள் மூன்று கூபன்களுடன் கதையை அனுப்பவேண்டும்.
4. சொந்தக் கதையாகப் பிறர் உதவியின்றி எழுதவேண்டும். இதற்குப் பெற்றோர் அல்லது ஆசிரியர் அத்தாட்சிக் கடிதம் இருக்கவேண்டும்.
5. கதை, கண்ணனில் ஆறு பக்கங்களுக்கு மேல் போகக் கூடாது.
6. தேர்ந்தெடுக்கப்படாத கதைகள் திருப்பி யனுப்பப்பட மாட்டாது. போட்டி சம்பந்தமாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது
7. கதை கிடைக்கவேண்டிய கடைசித் தேதி 15-6-54.

15-6-'54

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

56

56/3-54

2 - JUL 1954

MADRAS



கேட்டீர்களா!

ஹரிஜன மாணவர் உபகாரச் சம்பளம்

சர்க்கார் அங்கீகாரம் பெற்ற எலிமெண்டரி பாடசாலைகளில் படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமும் புத்தக ஸ்காலர்ஷிப்பும் கொடுக்கப்படுகின்றன. தொழில் கல்விக்குரிய உபகாரச் சம்பளங்களும் வழங்கப்படுகின்றன முழு விவரங்களையும் அறிய விரும்புவோர் ஹரிஜன நல இலாகா டைரெக்டர் (27, ஹால்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை) அவர்களுக்கும் ஜில்லாக்களில் இருக்கும் ஹரிஜன நல இலாகா ஆபீஸர் அவர்களுக்கும் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

தாம்பரம் சானடோரியம்

தாம்பரம் ஸ்டேஷனுக்கும் குரோம்பேட்டை ஸ்டேஷனுக்கும் நடுவில் தாம்பரம் க்ஷயரோக சானடோரியம் இருக்கிறது. அங்கே வரும் நோயாளிகளுக்காகவும் அங்கே வசிக்கும் ஊழியர்களுடைய சௌகரியத்துக்காகவும் ஒரு புதிய ரெயில்வே ஸ்டேஷன் திறக்கப்பட்டுள்ளது. இதை இந்திய யூனியன் தொழிலாளர் நல மந்திரி ஸ்ரீ வி. வி. கிரி திறந்து வைத்தார்.

ருஷ்ய பாஷையில் அர்த்த சாஸ்திரம்

சந்திரகுப்த மௌரியனுக்கு அமைச்சராக இருந்தவர் கௌடில்யர் என்ற தென்னிந்தியர். இவரைச் சாணக்கியர் என்றும் வழங்குவார்கள். ராஜதந்திரத்தில் இவருக்கு இணையே இல்லை என்று சரித்திரம் கூறுகிறது. இவர் எழுதியதுதான் அர்த்த சாஸ்திரம் என்பது. ராஜதந்திர முறைகளை இவர் மிக நுணுக்கமாக இதில் விவரித்திருக்கிறார். இந்த நூலைப் பல பாஷைகளிலும் மொழிபெயர்த்திருக்கிறார்கள். இப்பொழுது இரு ருஷ்ய சம்ஸ்கிருத நிபுணர்கள் இதை சம்ஸ்கிருதத்திலிருந்து ருஷ்ய மொழியில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஏற்கனவே மகாபாரதத்தின் முதல் பகுதியை ருஷ்யர்கள் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள்.

காந்தி மண்டப நிதி

கிண்டி ராஜபவனத்துக்கு அருகில் காந்திஜி ஞாபகார்த்த ஆலயம் கட்டுகிறார்கள். கல் தச்சர்கள் மும்முரமாக இந்த வேலையில் ஈடுபட்டுள்ளார்கள். இதைக் கட்டி முடிக்கும் பணியில் அனைவருக்கும் பங்கு இருக்கவேண்டும் என்பது இதில் சம்பந்தப்பட்டவர்களுடைய ஆசை. ஒரு ரூபாய்க்குக் குறையாமல் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அனுப்பி உதவும்படி சிறுவர்கள் பெரியோர்கள் அனைவரையும் ராஜாஜி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

பஸ்களில் அரைக் கட்டணம்

பஸ்களில் பிரயாணம் செய்யும் மூன்று வயது முதல் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இனி அரைக் கட்டணம் தான் வசூலிக்க வேண்டும் என்று சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடு விரைவில் அமலுக்கு வரும்.

கண்ணன் கிளைக் கழகம்

இன்சீன்-பர்மா	உபதலைவர்கள்:	K. S. மணி
		K. தியாகராஜன்
	செயலாளர்கள்:	P. நாச்சியப்பா
		K. சுந்தரமூர்த்தி
	பொருளாளர்:	M. கிருஷ்ணன்

பதினைந்து பேர் கொண்ட ஒரு செயற்குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வாசகசாலை ஒன்றும் நடத்தப்படுகிறது.

மேட்டுத் தெரு-சேலம்	உபதலைவர்கள்:	G. சிதம்பரம்
		A. வித்யாசாகர்
	காரியதரிசி:	V. ஞானவேல்

எட்டுப் பேர் கொண்ட செயற்குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. "வெண்ணிலா" என்ற கையெழுத்துப் பத்திரிகையும் நடைபெறுகிறது. 'பாசம்' என்ற நாடகம் சமீபத்தில் நடைபெற்றது.

புதுநகர்-கடலூர்	உபதலைவர்கள்:	அரங்கநாதன்
		ராஜன்
	செயலாளர்:	சம்பத்து

செயற்குழு ஒன்று ஏற்படுத்தப்படவிருக்கிறது. "சுடர்" என்ற கையெழுத்துப் பத்திரிகை நடைபெறுகிறது.

பள்ளத்தூரில் (செட்டிநாடு): கண்ணன் கிளைக் கழகம் ஸ்தாபிக்க அரு. அண்ணாமலை, அ. மு. ப. அ. அ. இல்லம், அ. மு. தெரு என்ற விலாசத்தில் அங்கத்தினர்கள் சந்திக்கலாம்.

இடைப்பாடியில்: கண்ணன் கிளைக் கழக நான்காவது ஆண்டின் நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்க, அங்கத்தினர்கள் (20-6-'54) ஞாயிறு அன்று 'பாரதி சிறுவர் படிப்பக'த்தில் காலை 9 மணிக்கு, உபதலைவர் ப. வேலுசாமி அவர்களைச் சந்திக்கவும்.

பேனா நண்பர்கள்:

1. பெரி. சுந்தரலிங்கம், 97, ஸ்டேஸ் ரோடு, கிரேன்பாஸ், கொழும்பு-14.

2. டி. ஜி. சேதுராமன், தெற்குத் தெரு, திருவானைக்காவல்.

3. வி. தனசேகரன், 30, திருவேங்கட முதலித் தெரு, பெரியமெட், சென்னை-3.

4. கே. ஸி. விசுவநாதன், 49, பிள்ளையார் கோயில் தெரு, தரணம்பேட்டை, குடியாத்தம். (வ. ஆ.)

5. ஆர். நாகராஜன், 5, ஆத்ரேயபுரம், சூளை மேடு, சென்னை-24.

6. ஆர் வரதராஜுலு, 2/A தர்மராஜா கோவில் சந்து, வெப்பேரி, சென்னை-7.

Reg. No. M. 5э

புதிய கண்ணன் வெளியீடுகள்

ப வ ழ வ ல் லி

கி. ரா. எழுதியது

அது ஒரு தனி உலகம். அங்கே வசிக்கும் மனிதர்கள் எல்லரும் விசித்திரமானவர்கள். பிராணிகளும் விசித்திர இயல்ட கொண்டவை. முத்துக்களும், நவரத்தினங்களும், பவழங்களும் விளையும் நாடு. அங்கே போய்ச் சேருகிறுன் சுந்தரம். ராஜகுமாரி பவழவல்லியைச் சந்திக்கிறுன். அவனுல் ஆகாத காரியத்துக்கெல்லாம் ஆமை ஒன்று உதவுகிறது. பலவிதச் சோதனைகளில் அகப்பட்டுக்கொள்கிறுன். மிகவும் சுவாரஸ்யமான கதை.

விலை 12 அணு

மின்னல் அரக்கன்

இதில் உள்ள கதைகள் எல்லாம் அற்புதமான கர்ண பரம்பரைக் கதைகள். மாயாஜாலங்கள் புரியும் மாயாவிகளும் சோதனைகளில் வெற்றி பெறும் வீரர்களும் ஆபத்தில் சிக்கித் தவிக்கும் ராஜகன்னிகைகளும் இந்தக் கதைகளில் பாத்திரங்களாக வருகிருர்கள். கதையின் போக்கும் கற்பனை அழகும் நம் உள்ளத்தைக் கவரக்கூடியவை. படித்துப் பாருங்கள். பரவசம் கொள்வீர்கள்!

விலை 8 அணு

வால் அறுந்த குரங்கு

வால் அறுந்த குரங்கு, இதோ இந்தப் பிள்ளை, ஈயின் கதை முதலிய ஐந்து பாட்டுக் கதைகள் அடங்கிய சிறுவர் புத்தகம். பாட்டைப் பாடிக்கொண்டே எழுத்துக்களைக் குழந்தைகள் கற்றுக்கொண்டு விடுவார்கள். வர்ணப்படங்கள் நிறைந்தது.

விலை 8 அணு

ச ம ர் த் து மை ன

தி. ஜ. ர. எழுதியது

இந்தப் புத்தகத்தில் எட்டுக் கதைகள் இருக்கின்றன. கதைகள் என்ருல் கட்டுக் கதைகள் அல்ல. எல்லாம் உண்மைக் கதைகள்; விலங்குகள், பறவைகள் இவற்றின் குணங்களையும் பழக்க வழக்கங்களையும் உள்ளபடி சித்திரிக்கும் கதைகள். சுவையுள்ள கதைகள். அழகிய படங்கள் நிறைந்தது.

விலை 8 அணு

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

க ண் ண ன் கா ரி யா ல ய ம்

மயிலாப்பூர் :: :: சென்னை—4.